| VALUE ADDED COURSE – மதிப்புக்கூட்டு திறனூக்கப்பாடம் (இளங்கலை மாணவர்கள் அனைவருக்கும்) | | |
|---|---|---|
| பாடத்திட்டம் | நேரப்பங்கீடு | மொத்த மதிப்பெண்கள் |
| 1.அச்சும் பதிப்பும் | மொத்த நேரம் - 30 மணி | 50 |
| 2.நாட்டுப்புற கைவினைக்கலைகள் | மொத்த நேரம் - 30 மணி | 50 |

பாடத்திட்டம் பகுதி - I தமிழ்

2023 - 2024 ஆம் கல்வியாண்டில் சேர்வோர்க்குரியது

முதலாமாண்டு நேர ஒதுக்கீடு (பருவத்திற்கு)

**B.Sc. / B.Com.– For Computer Science / Commerce**

| பாடப்பகுதி | | நேரப்பங்கீடு<br>மொத்த நேரம் - 75 மணி | மொத்த மதிப்பெண்கள் (75) |
|---|---|---|---|
| அலகு – I (UNIT-I) | செய்யுள்<br>இலக்கணம் | செய்யுள் - 13<br>இலக்கணம் - 2 | 15 |
| அலகு –II (UNIT-II) | உரைநடை<br>இலக்கியவரலாறு | உரைநடை - 13<br>இலக்கியவரலாறு - 2 | 15 |
| அலகு –III (UNIT-III) | செய்யுள்<br>இலக்கணம் | செய்யுள் - 13<br>இலக்கணம் - 2 | 15 |
| அலகு –IV (UNIT-IV) | உரைநடை<br>இலக்கியவரலாறு | உரைநடை-13<br>இலக்கியவரலாறு - 2 | 15 |
| அலகு –V (UNIT-V) | ஆளுமைத்திறன் /வாழ்வியல்கல்வி படைப்பாக்கம் ICT TOOLS USED/பயிற்சி ஏடு (இரண்டு புத்தகம் - நான்கு பருவத்திற்கும்) | ஆளுமைத்திறன் /வாழ்வியல்கல்வி -10 படைப்பாக்கம் - 3 ICT TOOLS USED/பயிற்சி ஏடு - 2 | 15 |

# அச்சும் பதிப்பும்

## 1. எழுத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

அச்சைக் குறித்துத் தெரிந்து கொள்வதற்கு முன்பு அதற்கு அடிப்படையாக உள்ள மொழி, எழுத்து, சொல் ஆகியவற்றைப் பற்றியும் ஒரளவு மனத்திற் கொண்டு மேலே தொடர்வது மிகவும் நன்றாக இருக்கும்.

மிக மிகப் பழங்காலத்தில் மனித இனம் விலங்கைப் போலவே வாழ்ந்துவந்தது. விலங்குகளுக்கு இடையில் வாழ்க்கை நடத்திவந்த மனிதனுக்கு அப்போது ஒலியை உணரும் காது இருந்தும், அதனை உற்று அறியும் ஆற்றலற்று ஊமையைப் போல் இருந்தான். மொழி என்று ஒன்று தோன்றாத காலம் அது. பசி எடுத்தபோது கிடைத்ததை உண்டு, தனது இன்றியமையாத தேவைகளைச் சைகைகள் காட்டி அங்க அசைவுகள் செய்து தனது கருத்தை அக்கால மனிதன் தன்னை ஒத்த பிறர்க்குத் தெரிவிக்க முயன்றான். பின்னரே உணர்ச்சியின் உந்துதலால் தனது குரலைப் பயன்படுத்திச் சிலவகை ஒலிகளை ஒலிக்க முற்பட்டான். அடுத்து, மனிதன் போராடிப் போராடித் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்பச் சொற்களைச் சொல்லக் கற்றுக் கொண்டான். **உணர்ச்சியொலியாலும்** ஒன்றின் ஒலியைக் கேட்டுக் கேட்டு அதுபோன்று செய்யும் **போலியொலியாலும் குறிப்பொலியாலும்** மனிதருக்குக் கருத்துகள் வளரத்தொடங்கின. மேற்சொன்ன மூன்று வகை ஒலிகளினால் மனிதருடைய பேச்சு நாளடைவில் நன்றாகச் சீர்திருத்தி – பண்பட்டு – மொழியாக மாறியது.

மொழியின் வளர்ச்சியில் நாம் **உணர்ச்சி வடிவம், கருத்துவடிவம், ஒலிவடிவம்,** அல்லது **எழுத்துவடிவம்** எனும் நான்கு வகை வடிவங்களைக் காணலாம். எழுத்தின் வரலாறு பல்வேறு இடங்களில் பலவிதமாகத் தொடங்கி, வளர்ந்து திரிந்துவந்திருக்கிறது. "எழுத்து நான்கு வகை: உருவெழுத்தும், உணர்வெழுத்தும், ஒலியெழுத்தும், தன்மையெழுத்தும்" – என்கிறது **யாப்பருங்கல விருத்தி.**

"கருவிகள், ஆயுதங்கள், பாண்டங்கள் ஆகியவற்றைப் பயன் படுத்திய மனிதர்கள் ஐந்து இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே இருந்திருக்கலாம் என்பதை அண்மைக் கண்டுபிடிப்புகள் உணர்த்துகின்றன. இவற்றில் கற்கருவிகள் மட்டும் இன்றளவும்

நிலைபெற்றிருக்கின்றன. பிற வகைகளின் மாதிரிகள் கிடைக்கவில்லை. மேலும் நாற்பதாயிரம் ஆண்டுகளுக்கு மேற்படாத முற்காலத்தில்தான் இப்பொழுது நாம் அறிந்துள்ள (மூளைவளர்ச்சியில்) மனிதர்களைக் காண்கிறோம். அவர்களிடம் நன்கு உருவாக்கப்பட்ட கருவிகள் இருந்ததுடன், இன்றைய சுவைக் கேற்ப உயிரினங்களின் உருவத்தைச் செதுக்கவும் ஓவியமாகத் தீட்டவும் கூடியவர்களாக இருந்தனர் என்பதையும் அறிய முடிகிறது.’’[1]

எதிரே இருந்தவர்களுக்குக் கருத்தைத் தெரிவிக்கவே மொழி மனிதனால் உண்டாக்கப்பட்டது. எனவே, மனிதன் தன் கருத்தைச் சொல்ல – உணர்ச்சியால் ஒலியை எழுப்பி, கைகளால் சைகை காட்டிச் சித்திரத்தால் சித்திரித்து, அதனையே கருத்திற்கு அடையாளமாக்கி, அதன் பின்பு சொற்களைத் தனித்தனியே சொல்லத் தொடங்கி மொழியை உருவாக்கினான். அவனது வளர்ச்சி மொழியைச் செப்பனிட்டுக் கொள்வதோடு நின்றுவிடவில்லை. ஒலி வடிவத்திற்கு வரிவடிவம் (எழுத்துருவம்) பெறுவதிலும், அதனைப் பலவிதப் பொருள்களில் பொறிப்பதிலும் முன்னேற்றங் கண்டது. இந்த எழுத்து – கோல் எழுத்து, சித்திர எழுத்து, ஆப்பு வடிவ எழுத்து, வட்டெழுத்து, செமிட்டிக் எழுத்து, சீன எழுத்து என்று பல வகையாகக் குறிக்கப்படுகிறது.

எழுத்துகளை உள்ளடக்கிய பழைய நாகரிகத்திற்குப் பெயர் பெற்ற இடங்கள் சிந்துவெளி (Indus valley), சீனம் (China), எகிப்து (Egypt), எல்லாம் (Ellam), சுமேரியா (Sumeria), பாபிலோன் (Babylon), கிரீட்டு (Crete) என்பனவாகும்.

கி.மு. 4,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட எழுத்து பூர்வமான ஆதாரம் எதுவும் தொல்பொருள் ஆய்வாளர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, எழுத்தின் வரலாற்றை 6,000 ஆண்டுகளாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். உண்மையான எழுத்தின் படிப்படியான வளர்ச்சி – வரையப்பட்ட – செதுக்கப்பட்ட – உருவங்களிலிருந்துதான் என்பதை நாம் நன்கு மனத்திற் கொள்ளவேண்டும்:

‘‘ஒவ்வொரு வடிவமும் ஒவ்வொரு கருத்தினைக் குறிப்பதோடு நிற்காமல் அந்தந்த வடிவத்திற்குரிய ஒலியையும் குறிப்பதாயிற்று. . . முதலில் ஒவ்வொரு வடிவமும் காட்டும் முழு ஒலியையும்கொண்டு சொற்களை எழுதினர். பின்னர் அந்தந்த ஒலியின் முதலசையை மாத்திரம் அதனதன் வடிவம் குறிப்பதாகக் கொண்டு எழுதினர். அதற்குப் பின் ஒரு வடிவம் அதற்குரிய ஒலியின் முதலோசையையே

1. ‘‘கூரியர்’’ (தமிழ்)

குறிப்பதாகக் கொண்டனர் . . . உருவெழுத்தும், கருத்தெழுத்தும், அசையெழுத்தும், ஓரசையெழுத்தும் படிப்படியாகப் பரிணமித்தன. இன்று நாம் ஆளும் எழுத்துகளில் எந்தச் சித்திரமும் இல்லை என்பது உண்மை. ஆனால், இவையெல்லாம் ஓரோசை எழுத்துகளாக அமைந்த சித்திரங்களின் முறையான வழித்தோன்றல்களே'' — என்கிறார் திரு எஸ். இராமகிருஷ்ணன்.[1]

''மொகஞ்சதரோவிலுள்ள சிந்துவெளி எழுத்துகள் முதலெழுத்துக் குறியீட்டு நிலையை கி.மு. 3,000 — த்திலேயே அடைந்திருந்தன. எகிப்திய எழுத்துகளுக்கும் சுமேரிய எழுத்துகளும் அவை முற்பட்ட வளர்ச்சி பெற்றிருந்தன. அவற்றுக்குச் சிந்துவெளி எழுத்துகளே வழிகாட்டிகளாயிருந்தன என்பதை இது காட்டுகிறது. சீன எழுத்துகளுக்கும் அவை தூண்டுதலாய் இருந்திருக்க வேண்டும் என்று கருத இடமுண்டு . . .

''தமிழ் எழுத்துகளும் ஏனைய எல்லா இந்திய எழுத்துகளும் சிந்துவெளி எழுத்தின் திரிபு வளர்ச்சி வகைகளே. ஆனால், தமிழ் எழுத்துகளே சிந்து வெளி எழுத்துகளின் நேர் மரபில் வந்தவை. இன்றைய தமிழ் எழுத்துகளைப் போலவே அவையும் முப்பதாய் இருந்தன. எழுத்து முறைமை, வகுப்பு, வரிவடிவு ஆகிய மூன்றிலும் தமிழ் எழுத்தொலிகளை மூல — ஒலிகளாகக் கொண்டே சமஸ்கிருதம் முதலிய ஏனைய இந்திய மொழிகளின் எழுத்துகள் வகுக்கப்பட்டுள்ளன என்று காண்டல் எளிது''[2] — என்று சிந்துவெளி எழுத்தின் பெருமையைப் பற்றிப் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை எம்.ஏ.எல்.டி. கூறுகிறார்.

சீனரின் சித்திரத்தாலான சீனமொழி எழுத்து கி.மு. 2,500 ஆண்டுக்குரியது; ஓவிய எழுத்து முறைக்குச் சீனர்முறை நெருக்கமானது. ஒவ்வொரு சொல்லுக்கும் ஓர் ஓவிய வடிவம் அதற்குள்ளது; அது மாறாத ஓரசைச் சொல்லாகும். சாதாரண நூல்களைப் படிப்பதற்கு ஒருவருக்கு அவற்றில் 3,000 உரு வடிவங்கள் தெரிந்திருக்க வேண்டும். அகராதிகளில் 40,000க்கும் மேற்பட்ட படஎழுத்துகள் உள்ளன. தற்போது பதினாயிரம் குறியீடுகள் அச்சடிக்கப் பயன்படுத்தப் படுகின்றன. ஜப்பானிய எழுத்தும் சீனமொழியை அடியொற்றியே அமைக்கப்பட்டுள்ளது.

எகிப்தின் மிகப்பழைய எழுத்துகள் ஓவிய வடிவுடையன. இப் படவடிவிலிருந்துதான் எண்ணங்களைக் குறிக்கும் குறியீடுகள் உண்டாயின. இக்குறியீடுகள் அவ்வடிவுடைய பொருள்களைக்

1. 'புத்தகத்தின் கதை' பக்கம் 25 — 26, பண்புப் புத்தக வெளியீடு, 11; முதற்பதிப்பு, மே 1960.

2. ''தென்மொழி'' எனும் நூலின் 93 ஆம் பக்கம்.

குறிக்காமல் சில கருத்துகளைமட்டும் குறித்தன. எகிப்தியரின் இலக்கியங்கள் ஹெராடிக் (Heratic) என்னும் ஒருவகைச் சுருக்கெழுத்தால் எழுதி வைக்கப்பட்டுள்ளன. எல்லம் மக்களும் ஓவிய வடிவான எழுத்துகளைப் பயன்படுத்தினர். சுமேரியரின் எழுத்துகள் ஆப்பு வடிவமாய் இருந்தமையால் அவை 'ஆப்பு எழுத்துகள்' எனப்பட்டன. இவ் ஆப்பு எழுத்துகளும் ஓவிய எழுத்துகளின் சுருக்க வடிவமேயாகும். ஓவிய வடிவத்திலிருந்து அசை வடிவத்துக்கான முதல் நடவடிக்கை எடுத்தவர்கள் சுமேரியர்கள்தாம். சுமேரிய நாகரிகமே எகிப்திய நாகரிகத்திற்கு அடிப்படையானது. "எகிப்தில் கிடைத்துள்ள நினைவுச் சின்னங்கள் பத்திரங்களில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துகளிலிருந்தும் கி.மு. 3,000 ஆண்டிலேயே அங்கு முறையாக அமைந்த அரசும் பெரும் நகரங்களும் இருந்தன என்பதையறிகிறோம். அவற்றில் எழுதுவது நடைமுறையில் இருந்தது."[1]

பழைய எகிப்திய எழுத்தை இனம் கண்டு பிடிப்பதற்கு, கிரேக்க மொழி பெயர்ப்புடன் கூடிய "ரொசெட்டாக்கல்" திறவுகோலாக இருந்தது!

சுமார் கி.மு. 2,100இல் ஹிக்சோஸ் எனும் செமித்திய இடையர்கள் எகிப்துமீது படையெடுத்து, அதனைப் பணிய வைத்து, ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகள் வரை ஆண்டனர். அவர்கள் எகிப்திய மொழியை நன்றாகக் கற்று, சில எகிப்தியச் சித்திரக் குறியீடுகளைத் தேர்ந்தெடுத்து, எளிதாக்கித் தமது நெடுங்கணக்கை உருவாக்கினர். ஹிக்சோஸ் ஆட்சி மறைந்த பின்னரும், அவர்கள் படைத்துக் கொடுத்த நெடுங்கணக்கு மறையவில்லை. அவர்களது உறவினரான பினிஷியர்கள் அதனைக் கைப்பற்றினார்கள். இந்த பினிஷியர் ஆசியா மைனரிலும் மத்திய தரைக்கடல் ஓரத்திலும் வாழ்ந்தவர்கள். இவர்கள் கடலோடிகளாக மாறி, வெளிநாடுகளுடன் வாணிபஞ்செய்து, சாமானியர்களின் தேவைக்குப் பயன்படும் பண்டங்களையே வாங்கி விற்றனர். ஏராளமான சில்லறை விற்பனைகளுக்குக் கணக்கு வைக்க வேண்டியிருந்ததால், பினிஷியர்களும் எளியதோர் எழுத்து முறையைக் காண நேரிட்டது!

ஆசியா மைனரிலும் சிரியாவின் வடபகுதியிலும் வாழ்ந்த ஹிட்டைட் எனும் மக்கள் கி.மு. 1,500 ஆம் ஆண்டிலேயே ஒருவகை எழுத்து முறையைப் பயன்படுத்தினர். வணிகரும் குருக்களுமான இவ்வகையினர் பாபிலோனியரது லிபியில் 29 ஆப்பு வடிவங்களைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொன்றுக்கும் ஒரு தனி லிபியைக் கற்பித்து ஒரு நெடுங்கணக்கை உருவாக்கினர்; இவர்கள் பினிஷியர்களுக்கு வடகோடியில் இருந்தவர்கள். முன் சொன்ன ஹிக்சோஸ் எகிப்தில்

உருவாக்கிய நெடுங்கணக்கு, பாப்பைரஸ் தாளில் எழுதுவதற்குத் தகுதியானதாக இருந்ததால், பினிஷியர் அதனைக் கைக்கொண்டனர். இவ்வாறு எகிப்தியச் சித்திர லிபியிலிருந்து ஹிக்சோஸ் மாறுதல் செய்தும், பின்பு பினிஷியர் செப்பம் செய்த நெடுங்கணக்கே பின்னாளில் பல நாடுகளுக்குப் பரவியதாகும்.[1]

கி.மு. 1,000க்குப் பின்னர், பினிஷியர் தம் கப்பல் மூலம் சென்ற – சைப்ரஸ், கிரேக்க நாடுகள், ஜிப்ரால்டர் போன்ற இடங்களில் பொருள்களை வாங்கி விற்றதுடன், புதிய எழுத்து முறையையும் பரப்பினார்கள். எனவே, கிரேக்கர்கள் பினிஷியரது நெடுங்கணக்கைக் கற்றுக்கொண்டு, அதனைத் திருத்தித் தமது ஒலிக் கணத்துக்கு ஏற்றதாக மாற்றி அமைத்துக்கொண்டனர். இன்றைய ஐரோப்பிய லிபிகள் அனைத்துக்கும் இப் பழைய கிரேக்க லிபியே தாயாகும். பழைய கிரேக்க – பினிஷிய எழுத்து வடிவங்கள், ஏறக்குறைய ஒன்றாகவே அமைந்திருக்கின்றன. உயிரெழுத்துகளைப் புதிதாகப் படைத்துக் கொண்டதே கிரேக்கரின் தனிப் பெருமையாகும்! கிரேக்க எழுத்து களிலிருந்து உரோமன் எழுத்துகளும், உரோமன் எழுத்துகளிலிருந்து ஐரோப்பிய மொழிகளின் எழுத்துகளும் உருவாகியுள்ளன.

1. பினிசிய மொழி 22 எழுத்துடையதாய் வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கம் எழுதப்படுவதாயிருந்தது.

# 3. அச்சுக் கலையின் துவக்கம்

அச்சுக்கலை தோன்றுவதற்கு இலச்சினைகளை இடுதல் (குடிரைஞக்கல்), முத்திரைகளைப் பொறித்தல், கல்வெட்டிலிருந்து நகல் எடுத்தல், பட்டுத் துணியில் அச்சுப் பதித்தல், செதுக்கு தகடுகள், கல்லச்சுப் படிமைகள், மர அச்சுப் படிமைகள் முதலியவற்றிலிருந்து பிரதி எடுத்தல், நாணயக் காகிதம், சீட்டு அட்டை, வழிபாட்டுப் படங்கள் போன்றவற்றை அச்சடித்தல் – ஆகிய பலவழிகளில் பல படிகளைக் கடந்த பின்னரே தனித்தனி எழுத்துகளைக் கண்டு பிடிக்க நேர்ந்தது. இதுவும் பலவித நெருக்குக் காரணமாகவும் தேவை காரணமாகவுமே செய்யப்பட்டது.[1]

கி. பி. 1041இல் சீனாவில் **பி–ஷெங்** என்பவர் தனித்தனி அச்செழுத்தை முதன் முதலில் சீனக் களிமண்ணால் உருவாக்கிச் சுட்டு, அவைகளை ஓர் இரும்புத் தகட்டில் வைத்து, வேண்டியபடி அடுக்கி அமைத்து, இரும்புச் சட்டத்தினால் இறுக்கிக் கட்டி, அச்சுப் பதிப்புகளை எடுக்க முற்பட்டார். பிறகு தகரத்தினாலும், மரத்தினாலும், உலோகத்தினாலும் அச்செழுத்துகள் உருவாக்கப்பட்டன. இப்படித் தனித்தனி அச்செழுத்துகளைக் கொண்டு அச்சிடுமுறை சீனாவிலிருந்து கொரியாவிற்கும், அங்கிருந்து ஜப்பானிற்கும் பரவியது. இந்த முறையானது வெளியுலகிற்குப் பல ஆண்டுகள் வரை தெரியாமலிருந்தது!

பக்கம் பக்கமாக மரத்தில் அச்சுப் படிமை செய்து அச்சிடும் முறைதான் ஐரோப்பாவில் பெருவழக்கில் இருந்து வந்தது. **ஜான் கூட்டன்பர்க்கு** என்னும் ஜெர்மானியர்தான் மெயின்ஸில் 1439இல் சிறிய மரத்துண்டுகளில் தனித்தனி எழுத்துகளைத் தலைகீழாக இருக்குமாறு கத்தியால் செதுக்கி, அம் மரத்துண்டுகளைத் துளையிட்டுக் கோத்து, கருநிற மையால் மூழ்க வைத்து எடுத்து, மெல்லிய சவ்வால் (தோற்கடுதாசியில்) அழுத்தி அச்சிட்டுப் பார்த்தார். இதுவே அச்சுத் தொழிலுக்கு முதலில் அடிகோலிய முறையாகியது. இவர், பிறகு உலோகத்தில் அச்சுகள் செய்து **மாசரின் பைபிள்** (Mazarin Bible) என்ற விவிலிய நூலை (1454–1455)இல் **ஜோகன் பாஸ்ட்டின்** துணையுடன் முதன் முதல் யந்திரத்தின் மூலம் அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளார். இது ஒரு பக்கத்திற்கு 42 வரிகள் கொண்ட நூலாகும்.

---

1 மேலும் விவரம் அறிய "அச்சுக்கலை" எனும் எனது நூலைப் பார்க்கவும்.

இந்த அச்சுக்கலையானது கூட்டன்பர்க்கின் ஏற்பாட்டுடனும், பாஸ்ட்டின் ஒத்துழைப்புடனும், ஸ்கோபரின் கைவண்ணம் பட்டும் 1455இல் செம்மையாக உருவாகியது. அது இன்றைய நாள்வரை அடிப்படையில் மாற்றம் ஒன்றும் ஏற்படாமல் இருந்துவருகிறது. மேற்சொன்ன பாஸ்டும் ஸ்கோபரும் சேர்ந்து முதன் முதலில் வெளியிட்ட சால்டர் (Psalter) என்னும் தோத்திரப்பாடல் என்ற நூலில் தான் 1457 என்று காலங் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இது வண்ணமுறையில் அச்சிடப்பட்ட முதல் நூல் என்று சொல்லப் படுகிறது.

இக் கலையானது ஐரோப்பாவில் உள்ள நாடுகளில் கீழ்க் குறித்துள்ளபடி பரவியுள்ளது: இத்தாலி (1465), ஃபிரான்ஸ் (1470), ஸ்பெயின் (1474), இங்கிலாந்து (1477), டென்மார்க்கு (1482), ஸ்வீடன் (1483), போர்ச்சுகல் (1495), ரஷ்யா (1553). இந்தியாவிற்கு 'அச்சுக்கலை' தெரிந்தது 1556இல் தான். இந்த வரலாறே தனியானது.

கி.பி. 1498இல் வாஸ்கோடகாமா என்னும் போர்ச்சுகீசியர் இந்தியாவிற்குக் கடல் வழியாக வந்து சேர்ந்தார். அவரைப் பின்பற்றி வந்த போர்ச்சுகீசியப் பாதிரிமார், இந்தியாவில் மதமாற்றம் செய்யும் பணியில் ஈடுபட்டனர். அவர்களுக்கு இவ்வகையில் துணைபுரிய அச்சடிப்பு முறை, ஓலையில் எழுதியதைவிட, காகிதத்தில் கையில் வரைவதைவிடச் சிக்கலற்றதாகவும், எளிதாகவும், அவசியமானதாகவும் இருந்தது. அக்காலத்தில் சூயஸ் கால்வாய் வெட்டப்படாததால், கப்பல்கள் நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக் கொண்டுதான் வரவேண்டியிருந்தது.

கிறிஸ்தவ சமய ஊழியத்திற்காக வேண்டிப் போர்ச்சுகலிலிருந்து ஆப்பிரிக்காவிலுள்ள அபிசீனியாவுக்குக் கப்பலில் அனுப்பப்பட இருந்த அச்சுகளும், அச்சியந்திரமும், அச்சடிப்பாளரும், பாதிரிமாரும் காலநிலை சரியில்லாததால், இந்தியாவிலுள்ள கோவாவில் வந்து இறங்கும்படி நேரிட்டது, மிகவும் பயனுள்ளதாக அமைந்து விட்டது! இந்த வகையில் **அச்சுக் கலையானது, இந்தியாவிற்குள் வந்தது 6–9–1557ஆம் ஆண்டு.** புதியதாகக் கிறிஸ்தவ மதமாறியவர்களுக்குப் பயன்படக்கூடிய அளவிற்குத் துண்டு வெளியீடுகளையும் நூல்களையும் அச்சிடுவதற்குத் திட்டமிட்டார்கள் பாதிரிமார்கள். ஆனால், அச்சுக்கருவிகளுடன் வந்திறங்கிய மத போதகர் திடீரென்று இறந்து விட்டார். அச்சுக்கலையைத் தெரிந்தவர்கள் ஐரோப்பாவிலே இருந்தனர். இதனால் இந்தியாவில் அதை அறிந்து கையாள்வதற்குப் பல நாள்கள் பிடித்தன!

இங்கு, **ஏசுமத இளைஞர் சங்க** (The Young Society of Jesus) உறுப்பினர்களால் இந்திய மொழிகளில் தயாரிக்கப்பட்ட கேள்வி

பதிலும் (Catechism) பிரார்த்தனை நூல்களும் (Prayer Books) சரிவர அச்சிடப்படவில்லை; மேலும், கையால் பிரதி செய்யப்பட்டுப் புதிதாக மத மாறியவர்களுக்கு வழங்கப்பட்டபோது, சரியாகத் தயாரிக்கப் படாததால், முன்னைவிட மோசமான மாறுதல்களை அவை பெற்றுவிட்டன! மேலும், அவை தனித்தனி அச்செழுத்துகளால் உருவாக்கப்படாமல், எழுத்துருவங்கள் (Characters) மூலமாகவே அச்சடிக்கப்பட்டிருந்தன. தனித்தனி எழுத்துகளால் அச்சுக்கோத்து அச்சடிக்கும் முறையானது ஐரோப்பாவில்தான் அப்போது பெருவழக்கில் இருந்துவந்தது. ஆகவே, இந்தியாவில் இருந்த ஏசுமதப் பாதிரிமாரின் மாகாணத் துணைத்தலைவரான எம். நன்ஸ்பாரட்டோ (Fr. M. Nunnes Bareto) என்பவர் **துறவி பிரான்சிஸ் சேவியரின் போதனையை** (Doctrina) வினாவிடைச் சுருக்கம் மூலம் போர்ச்சுகலுக்கு அச்சடிக்க அனுப்பினார். ஆனால், அது அங்கு அச்சிடப்படாமல் முடிவாக **இந்தியாவிலேயே 1557இல் அச்சாகியது.** கி. பி. 1500–லிருந்து 1557 வரை இந்தியாவில் எவ்விதமான அச்சடிப்பும் நடைபெற்றதாகத் தெரியவில்லை என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.[1]

1556இல் ஏசுமத ஊழியர்கள் கோவாவில் ஐரோப்பாவிலிருந்து வந்த லத்தீன் எழுத்துகளைக் கொண்ட முதல் அச்சகத்தை ஏற்படுத்தி, லத்தீன் மொழியிலும் போர்த்துக்கீசிய மொழியிலும் வெளியீடுகளைக் கொண்டுவர முனைந்தனர். ஆனால், முதல் தமிழ்த் துண்டு வெளியீடு **1554** இல் **“லூசோ தமிழ்ச் சமய வினாவிடை”** (Luso Tamil Catechism) போர்ச்சுகல்லின் தலைநகரான லிஸ்பனில் – அதாவது, இந்தியாவில் அந்த அச்சடிப்பு முறை அறிமுகப்படுத்துவதற்கு இரண்டு ஆண்டு களுக்கு முன்பே அச்சாகிவிட்டது! ‘‘இந்நூல் தமிழ் ஒலி வடிவைக் குறிப்பதற்குத் தமிழ் வரிவடிவைக் கையாளாது உரோமைய எழுத்து களையே கையாண்டது. இந் நூலின் ஒரே ஒரு படி லிஸ்பனுக்கு அண்மையில் உள்ள **பெலேம்** (The Ethnological Museum of Belem, Lisbon) மக்களியற் பொருட்காட்சிச் சாலையில் காப்பாற்றப்பட்டு வருகின்றது...

மற்றொரு சிறப்பும் இந்நுலூக்கு உண்டு. ‘‘இந்நூலில் இரு நிறங்களைக் கையாண்டு இருக்கின்றனர். கிறிஸ்தவ செபங்களையும் கொள்கைகளையும் தமிழ் மொழியில் பருத்த எழுத்துகளில் அச்சிட்டு, அவற்றிடையே போர்த்துக்கீசு மொழியிலும் அதே செபங்களையும்

1 “These presses arrived in 1550 but nothing seems to have been published till 1577.” - See. “The Indian press” - By **Margarita Barns** (1940), page - 6.

பிறவற்றையும் அச்சிட்டிருக்கின்றனர். மேலும் தமிழ்ச் செபங்களின் மொழி பெயர்ப்பை ஒவ்வொரு சொல்லுக்கும் நேரே போர்த்துக்கீச மொழியில் செந்நிறத்தில் அச்சிட்டிருக்கின்றனர். இவ்வாறு கற்பிக்கும் புது முறைகளையும் திறமையான எழுத்துகளையும் ஐரோப்பிய அச்சக வரலாற்றிலேயே காண்பது அரிது ....

"இதிலிருக்கும் செபங்களையும் மந்திரங்களையும் தமிழ் மொழியில் பெயர்த்தவர்கள், லிஸ்பன் நகரில் அக்காலத்தில் வாழ்ந்து வந்த மூன்று தமிழர்களான வின்சென் தே டி நசேரத், போட்ஜ் காவல்கோ, தோமஸ் தே குருசு என்பவர்கள். இவர்கள் தென்னாட்டு முத்துக்குளித் துறையிலிருந்து போர்த்துக்கல் நாட்டுக்கு அழைக்கப்பட்ட தமிழர்கள்."

"இந்நூலை மேற்பார்த்துத் திருத்தியவர் சுவாம் டே வில்லா கொண்டே என்பவராவர் . . . நிழற் படம் எதுவும் இந்நூலின் திறமையைக் காட்டும் வன்மையற்றது. அழகாக அச்சிடப்பெற்ற இந் நூல் 38 பக்கங்கள் அடங்கியதாகக் கத்தோலிக்க சமயத்தின் செபங்களையும் கோட்பாடுகளையும் கற்பனைகளையும் கொண் டுள்ளது. மேலும் நான்காம் பக்கத்தில் தமிழ் மொழியை உரோமைய எழுத்துகள் மூலமாக உச்சரிக்கும் பான்மையைத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளது. . .

"இந்திய மொழிகளில் முதன் முதலாக அச்சடிக்கப்பட்டு மேல் நாட்டில் வெளிவந்த நூல் இதுவேயாகும்" என்று விளக்கந் தந்துள்ளார் திரு தனி நாயகம் அடிகள்.[1]



மொகஞ்சதாரோ
எழுத்தும் சின்னமும்



அரிக்கமேடு பானை ஓட்டின்மீது
பழந்தமிழ் எழுத்துகள்



45190 -




பண்டைய தமிழ் (உயிர்) எழுத்துகளில்
நூற்றாண்டுவாரியாக ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

45190
NGM LIBRARY




பண்டைய தமிழ் (மெய்) எழுத்துகளில்
நூற்றாண்டுதோறும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்




தாமிழி எழுத்துகள் வட்டெழுத்துகளாக
வளர்ந்த விதம்

# 6. அச்சகத் தோற்றம்

இந்தியாவில் கி. பி. 1498இல் கள்ளிக்கோட்டையில் காலடிவைத்த போர்ச்சுகீசியர், சென்னையிலும் கோவாவிலும் பம்பாயிலும் இலங்கையிலும் மெல்லமெல்லப் பரவி, ஒரு நூற்றாண்டுவரை தமக்கு எதிரில்லாமல் போர்ச்சுகீசிய அரசின் சார்பில் ஆட்சி செய்து, தமது கத்தோலிக்க மதத்தைத் தீவிரமாகப் பரப்பிவந்தனர். போர்ச்சுகீசியரை அடுத்துக் கி. பி. 1600 இல் ஒல்லாந்தர், 1616இல் டச்சுக்காரர், 1620இல் ஆங்கிலேயர் ஆகிய வணிகக் குழுவினர் கரையோரப் பகுதியில் இடம் பிடித்துப் பையப்பைய ஆதிக்கம் பெற்றுவந்தனர். இவர்கள் சீர்திருத்த (புராடெஸ்டென்டு) பிரிவினராவர். இவர்களைத் தொடர்ந்து 1660இல் கத்தோலிக்கரான பிரஞ்சுக்காரர் இங்கு வந்தனர். இவர்கள் அனைவரும் முதலில் தம் வணிகத்தைப் பெருக்கிக் கொள்வதிலே பெருநாட்டஞ் செலுத்திவந்தனர். பிறகு வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிட்டு, இந்த நாட்டு அரசர்களுக்குத் தனித்தனியாக ஆதரவு கொடுத்துச் ‘சிண்டு’ முடிந்துவிடும் வேலையில் ஈடுபட்டு ஆதாயம் தேடிவந்தனர். போர்ச்சுகீசியரைப் போல இவர்கள் மிகத் தீவிரமாக மதப் பரப்புதலைச் செய்யாவிட்டாலும், ஓரளவு அடக்கத்துடனே தத்தம் மதக் கோட்பாட்டைப் புகுத்திவந்தனர்.

ஐரோப்பியர்களான இவர்களுக்கிடையே இருந்த மத வேற்றுமையும் வணிகப் போட்டியும் நாடு பிடிக்கும் ஆர்வமும் ஐரோப்பாவிலும் பிற இடங்களிலும் இவர்களுக்கிடையே போர்கள் நடக்கும்போதெல்லாம் அவற்றின் எதிரொலியாக இந்தியாவிலும் இலங்கையிலும் கிழக்கிந்தியத் தீவுகளிலும் சண்டையும் சச்சரவும் கலவரமும் ஏற்பட்டுக் கொண்டே இருந்தன. இதனால், இந்நாட்டின் எப்பகுதியிலும் அச்சமும் பீதியும் அமைதியின்மையும் நிலவிவந்தன. இத்தகைய சூழ்நிலையில்தான், அதாவது கி. பி. 16–18ஆம் நூற்றாண்டுகளில்தான் கிறிஸ்தவ ஊழியம் தொடர்ந்து நடைபெற்று வந்தது!

கி.பி. 1761இல் ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக் கழகம், தன் வணிகத்துடன் அரசியலிலும் நிர்வாகத்திலும் தலையிட்டு வெற்றிபெற்றுத் தமிழகத்தின் பல பகுதிகளைத் தமது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தது. இலங்கையையும் 1775இல் ஆங்கிலேயர் கைப்பற்றி இந்தியாவுடன் இணைத்து ஆளத் தொடங்கினர். பிறகு இவ் ஆங்கிலேய ஆட்சியினரால் மேற்கே ஏடனுடனும், தெற்கே இலங்கையுடனும், கிழக்கே பர்மா சிங்கப்பூருடனும் இந்தியாவைச் சேர்

45190 -

இதன் பின்விளைவாக ஒவ்வொரு பகுதியிலும் மாகாணங்களிலும் கிறிஸ்தவ ஊழியம் கிளைக்கத் தொடங்கியது. ஆகவே, ஆங்காங்கே அச்சகங்கள் ஏற்படுத்தப்பட்டுத் சமய துண்டு வெளியீடுகள் வெளியிடப்பட்டும் விவிலியம் அந்தந்த வட்டார மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு வழங்கப்பட்டும் வந்துள்ளன.

என்றாலும், ஐரோப்பியர் தவிர, பிற இனத்தினர் அச்சகம் அமைக்கப் பொதுவாக முன்வரவில்லை. ஒருவேளை முன்வந்த வரையும் ஆட்சியினர் அமைக்கக் கூடாதென்று தடுத்துள்ளனர். 1684 இல் போர்ச்சுகீசியரால் பிறப்பிக்கப்பட்ட கட்டளையின்படி, உள்நாட்டு மொழிகளில் அச்சிடுவது தடுக்கப்பட்டுள்ளது. பிற ஐரோப்பியரும் இம்முறையையே பின்பற்றியதால், 1824வரை இந்நாட்டைச் சேர்ந்தவர்களால் அச்சகம் அமைக்க முடியவில்லை. 1835வரை ஆங்கிலேய ஆட்சியிலும் கடுமையான சட்டங்கள் கொண்டு வரப்பட்டிருந்ததால், இந்நாட்டுக்குரியவர்களால் அச்சகங்கள் துவக்கப் படவில்லை. ஆளுநர் தலைவராக இருந்த திரு சார்லஸ் மெட்கஃப் (Charles Metcaffe) என்பவர் இக்கடுஞ் சட்டங்களை நீக்கிவிட்டார். அதனால் அச்சகங்கள் தோன்றலாயின!

ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் கழகம் இந்தியாவைக் கட்டியாள முற்பட்டபோது, இந்தியாவுக்குள் எந்த மிஷனரியும் வரக்கூடாது என்றும், இந்துக்களையாவது இஸ்லாமியரையாவது கிறிஸ்தவர்க ளாக்குவதற்கு எவ்வித முயற்சியும் செய்யக்கூடாது என்றும் கட்டளை யிட்டிருந்தது! ஆகவேதான், டென்மார்க்கினர்க்குச் சொந்தமாயிருந்த தரங்கம்பாடியிலும், ஒல்லாந்தருக்குச் சொந்தமாயிருந்த இலங்கையிலும், போர்ச்சுகீசியருக்குச் சொந்தமாயிருந்த கோவா போன்ற பகுதிகளிலும் பிரஞ்சுக்காரருக்குச் சொந்தமாயிருந்த புதுச்சேரி போன்ற பகுதிகளிலும் மட்டுமே கிறிஸ்தவப் பரப்புதல் நடைபெற்றுவந்தது. பின்னர், விக்டோரியா பேரரசியின் நேரடி ஆட்சியின்கீழ் இந்தியா கொண்டு வரப்பட்ட பிறகுதான், மத சுதந்திரம் அளிக்கப்பட்டு, முன்பிருந்த கட்டுப்பாடுகளும் தடைகளும் நீக்கப்பட்டன.

1845இல் டேனிஷ்காரர் தரங்கம்பாடியை இங்கிலீஷ்காரருக்கு விற்றுவிட்டனர்.

இனி, எங்கு எப்போது யாரால் அச்சகங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன, என்னென்ன வெளியீடுகள் வெளியிடப்பட்டுள்ளன என்பதை அறிந்துகொள்வோம். தெளிவுக்காக வேண்டி ஒவ்வொரு பகுதியாக எடுத்தியம்புவோம்.

கி.பி. 1500இல் தென்னிந்தியாவிலுள்ள அம்பழக்காட்டில் கத்தோலிக்க ஏசு சபை ஏற்படுத்தப்பட்டதும், அங்கு அமைக்கப்பட்டிருந்த அச்சுக்கூடத்தில் தமிழ் வெளியீடுகள் அச்சிட்டு வெளியிடப்

பட்டிருப்பதும் நாம் முன்பே அறிந்து கொண்டுள்ள செய்தியாகும். 1557இல் கொச்சியிலும், பிறகு கொல்லத்திலும் கோவாவிலும் வைப்புக்கோட்டையிலும் **புன்னைக்காயலிலும்** கத்தோலிக்கப் பாதிரிமார்களால் அச்சகம் அமைக்கப்பட்டுத் தமிழ் வெளியீடுகள் கொண்டுவரப்பட்டுள்ளதையும் நாம் இங்கு நினைவுபடுத்திக் கொள்வோம். கோவாவிலும் கொச்சியிலும் தமிழ் அச்சு எழுத்துகள் உலோகத்தில் வார்ப்பிக்கப்பட்டிருக்கின்றன.

அடுத்து, ஹாலந்து நாட்டிலே **இராட்டர்டாம்** என்னும் நகரிலே 1671இல் பிலிப்புஸ் பல்தேயுஸ் என்னும் சீர்திருத்தப் (புராடெஸ்டென்டு) பாதிரியார், இலங்கையில் கிறிஸ்தவ சமயப் பணிசெய்து தாயகம் திரும்பியதும், **'கர்த்தருடைய ஜெபம்'**, **'பத்துக் கட்டளைகள்'**, **'விசுவாசப் பிரமாணம்'**, முதலியவற்றை மொழிபெயர்த்து அவைகளைச் சிறுசிறுதுண்டு வெளியீடாக வெளியிட்டுள்ளார். இவர், தமது கீழ்நாடுகளின் அனுபவத்தைப் பற்றி எழுதிய பெரிய நூலில், மேற்கூறிய வெளியீடுகளைச் சேர்த்தும் பதிப்பித்துள்ளார். இது குறித்துத்தான் திரு **ஆர்னோ லெஃமன்** குறிப்பிட்டுச் சொல்லியிருப்பது முன்பே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த **ஆலே** நகரத்தில் **1710**இல் தமிழ் அச்சு எழுத்துகள் தயாரிக்கப்பட்டுத் தரங்கம்பாடிக்கு அனுப்பிவைக்கப்பட்டன. மேலும், **'நம்பிக்கையின் அங்கீகாரம்'**, **'விசுவாசப் பிரமாணம்'** என்னும் வெளியீடுகளும் 1713லேயே இங்கு அச்சிடப்பட்டுள்ளன. திரு சூல்ச்சையரால் மொழிபெயர்க்கப்பட்ட **'பரதீஸ் தோட்டம்'** என்னும் 532 பக்கங்கள் கொண்ட நூலும், **'ஞானமந்திர பூங்காவனம்'** (இது நான்கு பாகங்கள் கொண்டது) எனும் நூலும் 1749இலும் இங்கேதான் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

இவைகளையடுத்து, தமிழகத்தில் **தரங்கம்பாடியில்** 1712இல் சீர்திருத்தப் பிரிவினரால் தமிழ் அச்சகம் ஒன்று அமைக்கப்பட்டு, அச்சடிப்பு வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுவந்துள்ளன. இது குறித்த விவரங்கள் முன்னரே தரப்பட்டுள்ளன.

பிறகு, இலங்கை ஒல்லாந்த வணிகக் குழு ஆட்சியினரால் 'ஹாலந்துக்கார அச்சுக்கூடம்' 1741இல் இலங்கையின் தலைநகரான கொழும்புவில் அமைக்கப்பட்டது. இங்குத் திரு பல்தேயுஸ் பாதிரி மொழிபெயர்த்துக் கொடுத்த **'மத்தேயேஸ் சுவிசேஷம்'** பலரால் திருத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. ஒல்லாந்த அரசாங்கச் சார்பில் 1742 இல் இங்கு **4** சுவிசேஷங்களும் அச்சிடப்பட்டுள்ளன. திரு பிலிப்பு தெமெல்லோ என்னும் பெரிய மதகுருவான தமிழ்ப் பாதிரியாரால், கிரீக்கு மொழி மூலத்தின் பொருள் கெடாமலும், அதே

நேரத்தில் தமிழ் நன்னூலின் விதிமுறைகள் மீறப்படாமலும் மொழிபெயர்த்துக் கொடுத்த **தமிழ்ப் புதிய ஏற்பாடு** 1759இல் ஷி அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியாகியுள்ளது. இப் புதிய ஏற்பாட்டில் 13½ பக்கத்தில் ஒல்லாந்தர் மொழியிலும் 17 பக்கத்தில் தமிழிலும் முன்னுரை உள்ளது. மேலும் இவர் இயற்றிய **சத்தியத்தின் ஜயம்** (1753), **'இராசா தீர்க்கதரிசியாகிய தாவீதினுடைய சில சங்கீதங்களும்'** வேறுசில **பாட்டுகளும்** (1755), **'மருதப்பர் குறவஞ்சி'**, **'சூடாமணி நிகண்டி'**ன் 12ஆம் தொகுதியில் கூடுதலாகச் செய்துகொடுத்த 100 பாட்டுகள் (1859) ஆகியவை இங்கே அச்சாகியுள்ளன.

முன்னரே குறிப்பிட்டிருந்த **கிறிஸ்தவ அறிவு பரப்பும் சங்கம்** (Society for Promoting Christian Knowledge) 1689இல் காணப் பட்டதாகும். இந்த அமைப்பின் சார்பில்தான் **தரங்கம்பாடி** திருச்சபைக்கு அச்சும் அச்சுப் பொறியும் பிற உதவிகளும் அடிக்கடி அளிக்கப்பட்டன. இந்த அமைப்பில் ஜெர்மனி, டென்மார்க்கு, இங்கிலாந்து, ஸ்வீடன், இத்தாலி, ஹாலந்து, அமெரிக்கா போன்ற பல்வேறு நாட்டினர் கலந்துகொண்டு சமயப் பணிபுரிந்துவருகின்றனர். இதன் சார்பில்தான் 1728இல் திரு சூல்ச்சையரால் சென்னையில் எஸ்.பி.சி.கே. கிளை ஒன்று அமைக்கப்பட்டு இன்றும் இயங்கி வருகிறது. இந்த எஸ்.பி.சி.கே. யிடத்தில்தான் புதுச்சேரியிலிருந்து கைப்பற்றிவந்த அச்சுப் பொறியையும் அதற்குரிய பொருள்களையும் நிபந்தனையின்பேரில் ஆங்கில ஆட்சியினர் கொடுத்தனர்.

இவைகளைக் கொண்டுதான் **சென்னை வேப்பேரி எஸ்.பி.சி.கே. மிஷனால்** 1761இல் வேப்பேரியில் அச்சகம் ஒன்று நிறுவப்பட்டது. சிறிய அளவில் தொடங்கப்பட்ட இந்த **'வேப்பேரி அச்சகம்'**தான் **'எஸ்.பி.சி.கே. பிரஸ்'** (1864) என்று முன்பும், **'டையோசிஷன்' பிரஸ்'** (Diocesan Press) என்று அடுத்தும் பெயர் மாறி, இன்று பெரிய அளவில் சிறந்து விளங்கிவருவதாகும்.

**சர்ச் மிஷனெரி சொசைட்டி** (C.M.S.) என்னும் அமைப்பிற்கும் சென்னையில் கிளை ஒன்று இருந்தது. இதற்கும் இங்கு **சர்ச் மிஷன் பிரஸ்** (Church Mission Press) என்ற ஓர் அச்சகம் இருந்தது. இங்கும் பல நூல்கள் அச்சிடப்பட்டுள்ளன.

இந்த அச்சகத்தை **அமெரிக்க மிஷனரி சங்கமானது** (American Mission) 1838இல் வாங்கி, சென்னையிலுள்ள பிராட்வேயில் திறம்பட நடத்திவந்தது. இதில்தான் அச்சடிப்புத் தொழிலில் சிறந்து விளங்கிய திரு **பி.ஆர். ஹண்ட்** என்பவர் பணியாற்றி அழகான தமிழ் அச்சுருவங்களை அமைத்துக் கொடுத்தார்.

சிறந்த முறையில் இயங்கிவந்த ‘அமெரிக்கன் பிரஸ்’ விலைக்கு விற்க வந்தபோது, சென்னை எஸ்.பி.சி.கே. சங்கத்தினர் அதனை ரூ. 40,000 கொடுத்து வாங்கிக்கொண்டனர். இதுவே முதலில் எஸ்.பி.சி.கே. பிரஸ் என்றும், பின்னர் ‘டையோசீசன் பிரஸ்’ என்றும் அழைக்கப்பட்டு, இந்தியாவிலேயே பல்லாண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வரும் தனியாரால் நடத்தப்பெற்றுவரும் பெரிய அச்சகமாகும்.

‘சர்ச் மிஷனெரி சொசைட்டி’ (C.M.S.)யும், ‘லண்டன் மிஷனரி சொசைட்டி’ (L.M.S.)யும் கூட்டாகச் சேர்ந்து, தென்திருவாங்கூர் திருநெல்வேலி துண்டு வெளியீட்டுக் கழகத்தை ஏற்படுத்தினர். இதற்குப் பாளையங்கோட்டையிலும், திருநெல்வேலியிலும், நாகர்கோயிலிலும் 1817இல் கிளைகள் ஏற்படலாயின. இவைகளுக்கான சமயத் துண்டு வெளியீடுகளை அச்சிடுவதற்காக வேண்டி நாகர்கோயிலில் எல்.எம்.எஸ். பிரஸ் 1819இல் காணப்பட்டது. ‘சர்ச்மிஷ’னால் 1914இல் பாளையங்கோட்டை அச்சகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இங்கிருந்து திருநெல்வேலி துண்டு வெளியீட்டுக் கழகத்திற்கு வேண்டிய அச்சடிப்புப் பணிகள் செய்யப்பட்டுவந்தன.

1820ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவதற்காகப் பாதிரிமார் முயன்றனர். இதற்காக அச்சடிப்பாளரை அமெரிக்க நாட்டிலிருந்து வரவழைத்தனர். ஆனால், அவர் யாழ்ப்பாணத்திலிருந்து 15 நாளைக்குள் திரும்பிப்போய்விட வேண்டுமென்று அங்கிருந்த ஆளுநர் உத்தரவிட்டார்! பாதிரிமார் தமது முயற்சியைக் கைவிடாது, பனையோலைகளில் எழுத்தாணி கொண்டு எழுதுவித்து, மக்களுக்கு இலவசமாக வழங்கினர். கையெழுத்து நன்றாக எழுதக்கூடியவர்களுக்குச் சிறிது காசு கொடுத்துப் படிகளை எடுப்பித்து மக்களிடையே அவைகளை அளித்தனர்.

இலங்கையில் யாழ்ப்பாணக் கிறிஸ்தவ சமய வெளியீட்டுக் கழகம் 1823இல் தோற்றுவிக்கப்பட்டது. இதற்குத் திரு ஜே. நைட் பாதிரியால் செயலாளராக இருந்தார். சென்னையிலிருந்து இதற்கு வேண்டிய துண்டு வெளியீடுகள் முதலில் வாங்கிக்கொள்ளப்பட்டன. பின்னர், கொழும்புவிலுள்ள கோட்டா என்னும் இடத்திலிருந்த மிஷனெரி சங்கத்தினர் 1825இல் யாழ்ப்பாண நல்லூரில் ஓர் அச்சகத்தைத் தொடங்கினர். இங்குச் சமயத் துண்டு வெளியீடுகள் அச்சிட்டு வழங்கப்பட்டுவந்தன.

‘அமெரிக்க மிஷனெரி’கள் 1834இல் இந்த நல்லூர் அச்சகத்தை விலைக்கு வாங்கி விரிவுபடுத்திச் செயல்பட்டு வந்தனர். இங்கு வயதுவந்தவர்களுக்காகவும் சிறுவர்களுக்காகவும் துண்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அச்சிட்டு வெளிப்ப... பஞ்சாங்கங்களும் இங்கு...

இந்த 'அமெரிக்க மிஷனெரி'கள் – இலங்கையிலும், மதுரையிலும், சென்னையிலும் – கிளைகள் அமைத்துத் தொண்டு புரிந்துவந்தனர். இப்படிச் சமய ஊழியம் செய்ய வந்த குடும்பந்தான் புகழ்பெற்ற **ஸ்கட்டர்** குடும்பம். இவர்கள் ஆர்க்காட்டில் 1837லிருந்து சமயத் தொண்டை இடையறாது ஆற்றிவருகின்றார்கள். வேலூரில் உள்ள 'மிஷன் மருத்துவமனை' இவர்களால் அமைக்கப்பட்டதேயாகும். அண்மையில் வேலூரில் மறைவுற்ற திருமதி **அய்டா** (Iyda) அம்மையாரும் இக்குடும்பத்தைச் சேர்ந்தவரே ஆவர்.

மதுரையிலுள்ள **பசுமலையில்** 'அமெரிக்க மிஷனெரி'கள் 1871இல் ஒரு மர அச்சுப் பொறி (Wooden press)யுடன் அச்சகத்தை நிறுவினர். பிறகு, **டாக்டர் வாஷ்பெர்ன்** (Dr. Washburn) என்பவர் அமெரிக்காவிலிருந்து தம்முடன் 1872இல் ஹோ அச்சுப் பொறியை (Hoe Press) வாங்கிக் கொண்டுவந்தார். முன்னர் இருந்த மர அச்சுப்பொறி நீக்கப்பட்டுத் தட்டச்சுப் பொறி (Platen press) ஒன்று பொருத்தப்பட்டது. 1890இல் காலாலோ, விசையாலோ இயக்கப்படும் அச்சுப் பொறி ஒன்று அமெரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்டது. இங்குத் துண்டு வெளியீடுகளோடு சமய அறிவிப்புகளும் மாத வெளியீடுகள் இரண்டும் **பசுமலை** அச்சகத்திலிருந்து அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த அமைப்பு அகராதிகளைத் தயாரித்து மாணவர்களுக்குப் பெரிதும் உதவி செய்துவருகின்றது!

இப்படியாகக் **கிறிஸ்தவ சமய துண்டு வெளியீட்டுக் கழகங்கள்** (The Christian Tract Societies) சென்னையில் 1818லும், பாளையங்கோட்டையிலும் நாகர்கோயிலிலும் 1822லும், யாழ்ப்பாணத்தில் 1823லும், நெய்யூர் எனுமிடத்தில் 1830லும் நிறுவப்பட்டுச் சமயத் தொண்டு புரிந்துவந்தன. இதன் காரணமாகப் பலஇடங்களில் அச்சகங்கள் ஏற்படுத்தப்பட்டன. 'மதுரை அமெரிக்கமிஷன்', '**தஞ்சாவூர் துண்டு வெளியீட்டுக் கழகம்**', 'தரங்கம் பாடி மிஷன்' முதலியவையும் துண்டு வெளியீடுகளையும் அறிக்கைகளையும் தயாரித்து வெளியிட்டு வழங்கியுள்ளன.

1870இல் **கொழும்புவில் இலங்கைக் கத்தோலிக்கச் சபையாரும்** ஓர் அச்சகத்தை ஏற்படுத்தி, தமது பிரிவு சமய வெளியீட்டைச் செய்துவந்தனர். **யாழ்ப்பாணத்தில் வட்டுக் கோட்டையில்** 1823இல் ஏற்படுத்தப்பட்ட சமய ஊழிய அமைப்பானது, சமய போதனா கலாசாலையை ஏற்படுத்தியும், **அச்சகத்தை நிறுவியும்** பல சமய நூல்களையும் பொது நூல்களையும் வெளியிட்டுப் பெருந்தொண்டு புரிந்துள்ளது.

இவ்வாறாகச் சென்ற நூற்றாண்டுகளிலே கிறிஸ்தவ சமயத்தினர் – அவர்கள் எப்பிரிவைச் சேர்ந்தவராக இருப்பினும் – துண்டு

வெளியீடுகளையும், ஒற்றைத் தாள் அறிக்கைகளையும், சமய வினாவிடை விளக்கங்களையும், மொழி பெயர்ப்பு நூல்களையும், புதிய நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளனர்.

மேலும், திங்கள் இதழ்கள், வார இதழ்கள், செய்தித் தாள்கள் முதலியவற்றையும் முதன்முதலாக அறிமுகப்படுத்திச் சமயப் பரப்புதலோடு, பொது அறிவையும் விளக்கம் செய்து வந்துள்ளனர். கிறிஸ்தவர்களது இடையறாத சமயத் தொண்டினைக் கண்டும், அவர்களால் ஏற்படும் மதமாற்றுதலை அறிந்தும் – இந்து, இஸ்லாமிய, பௌத்த, ஜைன சமயத்தினரும் விழிப்புற்று எழுச்சி பெற்று, முன்னவர் செய்துவந்த பல துறைகளிலும் தாமும் ஈடுபட நாட்டங் கொண்டனர். முன்னவர் பெரு முயற்சியே பின்னவருக்கு வழிகாட்டியாகவும் தூண்டு கோலாகவும் அமைந்து காணப்பட்டது.

தமிழ் நாட்டில் விளங்கிவந்த பழங்காலக் கல்வி முறையை மாற்றியமைத்தவர்கள் கிறிஸ்தவப் பாதிரிமார்களும் ஆங்கில அரசினரும் ஆவர். இக் கிறிஸ்தவப் பாதிரிமார்களே பள்ளிகளில் மேல்நாட்டு முறைப்படி கல்வியைப் புகட்டினர்; பயிற்சி பெற்ற ஆசிரியர்களை உருவாக்கினர்; ஆண் பள்ளிக்கூடங்களோடு பெண் பள்ளிக்கூடங்களையும் அமைத்தனர்; பள்ளிகளுக்கு வகுப்புக்குத் தக்கவாறு பாடத் திட்டங்களை வகுத்துப் பாடப் புத்தகங்களை உருவாக்கி, அவைகளை மாணவர்க்குக் கற்றுத்தரச் செய்தனர்; பிழையின்றி எழுதவும் பழகுவதற்கும் 'சொல்வதெழுதல்' (Dictation) என்னும் பயிற்சியைப் புகுத்தினர். பூகோளம், வரலாறு, இயற்கைப் பாடம் முதலிய பல்வேறு வகையான பாடங்களைக் கற்பித்து மாணவர்களுக்குப் பொது அறிவைப் பெருக்கினர். வான நூல், உடற்கூறு நூல் முதலிய அறிவியற் கலைகளையும் அறிமுகப்படுத்தினர். இந்நூல்களையெல்லாம் தாய்மொழியிலேயே முதலில் கற்பித்தனர். தமிழில் மொழிபெயர்த்தும், தமிழிலேயே எழுதச் செய்தும், தமிழ் எண்களையே பயன்படுத்தி அச்சிட்டும் வெளியிட்டுவந்தனர்.

இக் கிறிஸ்தவப் பாதிரிமார் கல்வித்துறையில் செய்து வந்த தொண்டுகளைக் கண்ட ஆங்கிலேய ஆட்சியினர், மேல்நாட்டு முறையில் புதிய பாடசாலைகளை அமைத்தும், கல்லூரிகளை ஏற்படுத்தியும், பல்கலைக் கழகங்களை நிறுவியும் உள்ளனர். கல்வித்துறைக்கு என்று இவர்கள் 1854இல் பொதுக் கல்விப் பயிற்சித் துறை (Department of Public Instruction) என்ற ஒன்றை உண்டாக்கினர்; இத்துறைக்காக ஓர் அச்சகத்தையும் ஏற்படுத்தினர். இங்குப் பல பாடநூல்களும் பொதுநூல்களும் அச்சிடப்பட்டுள்ளன. பிறகு பல அச்சகங்கள் இவ்வழியில் ஈடுபடவே, 1868இல் இவ் அச்சகம் மூடப்பட்டது. வாரச் செய்தித் தாள் ஒன்றையும் இத்துறையினர் அச்சிட்டு

வெளியிட்டுவந்தனர். ஆனால், பாடநூல்கள் வெளியிடும் பொறுப்பைமட்டும் மேலே குறிப்பிட்ட பொதுக் கல்விப் பயிற்சித் துறையினரே 1889 வரையில் ஏற்று நடத்தி வந்தனர். இதற்குப் பின்பு பாடசாலைக்குரிய நூல்களை வெளியிடுவதற்குப் பல அமைப்புகள் முன்வந்ததால், பாடநூல்களை வெளியிடும் பொறுப்பைப் பாட நூற்குழுவிடம் (Text - Book Committee) இத் துறையினர் அளித்துவிட்டனர். இக் குழுவினர் தகுதியுள்ள பாட நூல்களைப் பள்ளிகளுக்காகப் பரிந்துரை செய்துவந்தனர்.

ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் கழகம் இந்நாட்டை ஆட்சி செய்து வந்த காலத்தில், சென்னைப் பட்டினத்தில், 1812இல் சென்னைக் கோட்டைக் கல்லூரி (College of Fort. St. George) ஒன்று நிறுவப்பட்டது. இதன் சார்பில், சென்னை மாவட்ட ஆட்சியாளராக (Collector) இருந்தவரும் தமிழறிந்தவருமான திரு. எல்லீஸ் துரையும், கர்னல் மக்கன்ஸி துரையும் 1820இல் சென்னைக் கல்விச் சங்கத்தை நிறுவியதில் முதன்மையாக இருந்தனர். இக் கல்விச் சங்கமானது 30 ஆண்டுக் காலத்திற்கு மேலாக நன்றாக அலுவல் செய்து வரலாயிற்று.

இச் சங்கத்தின் சார்பில் ஆங்கிலேய அதிகாரிகள் தமிழ், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளை அறிந்த கற்பிப்பாளர் (முன்ஷிகள்) மூலம் தாம் விரும்பிய மொழிகளைக் கற்றுவந்தனர். இச்சங்கத்தின் ஆதரவில் அவ்வப்போது நடத்தப்பெற்றுவந்த நாட்டு மொழித் தேர்வுகளில் தேர்ச்சியடைந்தவர்களின் பெயர்கள், அரசாங்கத்தின் செய்தி இதழான 'கெஜட்' (Gazettee) டில் வெளியிடப்பட்டுவந்தன. அந்தந்த வட்டார மொழிகளில் தேர்ச்சி பெற்ற அதிகாரிகளுக்குச் சம்பள உயர்வு கிடைத்தது. ஆகவே, ஆங்கிலேய அலுவலர்கள் இந்நாட்டு மொழிகளைப் பலன் கருதி ஆர்வத்துடன் கற்க முன்வந்தனர்! பின்னர் இச்சென்னைக் கல்விச் சங்கமானது 1854ஆம் ஆண்டு ஜூலை மாதம் மூடப்பட்டுவிட்டது.

இச் சங்கம் இயங்கிவந்தபோது, இதன் சார்பில் ஓர் அச்சுக்கூடமும், புத்தக விற்பனை நிலையமும், நூல் நிலையமும் நடத்தப்பெற்று வந்துள்ளன. ஆங்கிலேய ஆட்சியினருக்கு இந்நாட்டு மொழி தெரியாதிருந்தால், அதிகாரிகள் எங்குத் தவறான வழியைக் காட்டிவிடுவார்களோ என்ற அச்சத்தினால்தான், தனது வெள்ளை அதிகாரிகளை இந்நாட்டு மொழிகளைக் கற்றுக்கொள்ளும் படி ஆங்கிலேய ஆட்சி ஊக்கம் கொடுத்துவந்தது; சலுகையும் ஊதிய உயர்வும் அளித்தது. அதன் உள்நோக்கம் எப்படிப்பட்டதாக இருப்பினும், இக்கல்விச் சங்கத்தால் இந்நாட்டு மொழிகளுக்கு நல்ல ஏற்றம் உண்டாயிற்று என்பது மறுக்க முடியாத உண்மையாகும்! இக் கல்விச் சங்கம் அகராதி, இலக்கணம், மொழிபெயர்ப்பு முதலிய பணிகளுக்கும் பொருளுதவி செய்துள்ளது!

இக் கல்விச் சங்கத்தில் தலைமையாசிரியராகப் பணியாற்றிய இரு சிதம்பரப் பண்டாரம் என்னும் பெயருள்ள வித்துவான், 1814இல் மநு நூலின் இரண்டு பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்ததால், இக் கல்விச் சங்கம் இவருக்கு ஓராயிரம் வராகன் பரிசு வழங்கியது! இவர் 1832இல் காலமானார். மேலும், இது 1825இல் 'அமரகோசம்' முதலிய மூன்று நூல்களுக்காகத் திரு தாண்டவராய வாத்தியாருக்குப் பரிசு கொடுத்துள்ளது; அராபிக் கதைகளைத் தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்த திருஞான முதலியையும் ஆதரித்துள்ளது! பிறகு வில்லிவாக்கம் தாண்டவராய முதலியார் இதற்குத் தலைமைப் புலவரானார். அக்காலத்தில் சிறந்த தமிழ்ப் புலவர்களாக விளங்கியிருந்த திருவாளர்கள் முத்துசாமிப்பிள்ளை, புதுவை நயனப்ப முதலியார், கோட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், மதுரைக் கந்தசாமிப் புலவர் ஆகியோரும் இச் சங்கத்தின் தமிழாசிரியர்களாக இருந்துள்ளனர்.

இவர்களில் திரு முத்துசாமிப் பிள்ளை இச்சங்கத்தின் மேற்பார்வையாளராக இருந்தார். திரு எல்லீஸ் துரை விரும்பியபடி பிள்ளையவர்கள், தமிழ் நாடெங்கும் சுற்றுப் பயணஞ் செய்து, வீரமா முனிவர் இயற்றிய நூல்களை – அக்காலத்தில் அந் நூல்கள் அச்சிடப்படாமல் கையேட்டுச் சுவடிகளாக இருந்தன – தேடிச் சேர்த்துக் கொண்டு வந்தார்.

மேலும், இவர்தாம் முதன்முதலில் வீரமா முனிவரின் வாழ்க்கை வரலாற்றைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டவராவர்; சுவடிகளைத் தேடித் திரட்டும் பணியை முதன் முதலில் அதிகார பூர்வமாகச் செய்து முடித்தவரும் இவரே ஆவர். திரு கொற்றமங்கலம் இராமசாமிப் பிள்ளை, இச் சங்க நூலகக் காப்பாளராக இருந்துள்ளார்.

இச் சங்கமானது தமிழ்ப் புலவர்களுக்குப் புதிய முறையில் பயிற்சி அளித்து நற்சான்று கொடுத்தது. கம்ப ராமாயணத்தை முதன் முதல் பதிப்பித்தவரான திரு வேங்கடாசல முதலியாரும் இச் சங்கத்தின் நற்சான்று பெற்றவரே. மேலும், இது தமிழ் இலக்கணத்தை உரைநடையில் எழுதித் தருவோர்க்குத் தக்க சன்மானம் அளிக்கப்படும் என்று அறிவித்தது; கதைகள், வரலாறுகளை உரைநடையில் எழுதுவோர்க்கு ஊக்கங் கொடுத்து ஆதரித்தது. இதன் விளைவாகப் பலர் இது விரும்பிய வண்ணம் பல நூல்களை எழுதித்தர முன்வந்தனர். பல தமிழ் நூல்களும் மொழிபெயர்ப்பு நூல்களும் இச் சங்கத்தின் சார்பில் வெளியிடப்பட்டுள்ளன. அவைகளுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன:–

**1811– தமிழ் விளக்கம்:** திருவேற்காடு சுப்பராய முதலியாரால் எழுதப்பட்ட நூல்; சென்னைப் பட்டினத்தி[illegible] ஆங்கில மொழியிலும் மொழி[illegible]

1817இல் அச்சிடப்பட்டுள்ளது. இதுவே தமிழில் வெளிவந்த முதல் உரைநடை இலக்கண நூலாகும்.

1813 – இலக்கணச் சுருக்கம்: திரு திருச்சிற்றம்பலத் தேசிகரால் செய்யப்பட்டது; 85 பக்கங்கள் கொண்ட நூல். இதுவும் ஷி அச்சகத்தில் அச்சிடப்பட்டுள்ளது. இதில் தரப்பட்டிருக்கும் தமிழ் நெடுங்கணக்கு அட்டவணை பழங்கால அச்சடிப்புக்கு நல்ல எடுத்துக்காட்டாக உள்ளது.

1815 – இராமாயண உத்தரகாண்டக் கதை: ஷி சங்கத் தலைமைப் புலமைத் திருச்சிற்றம்பலத் தேசிகர் எழுதியது. ஷி சங்கத்து அச்சகத்தில் அச்சிடப்பட்டது; 132 பக்கங்கள் கொண்டது; எதுகை, மோனை அமைய எழுதப்பட்ட கதைப்புத்தகம் இது.

1828 – இலக்கண வினாவிடை: ஷி தாண்டவராய முதலியார் செய்தது; ஷி சங்கத்து அச்சகத்தில் அச்சிடப்பட்டது; 330 பக்கங்கள் கொண்ட நூல்.

1826 – கதாமஞ்சரி: சென்னைக் கல்விச் சங்கத்துத் தமிழ்த் தலைமைப் புலமை நடாத்திய தாண்டவராய முதலியாரால் தொகுக்கப்பட்டது. ஷி கல்விச் சங்கத்து அச்சகத்தில் பதிப்பித்தது.

இனி, சென்னைப் பாடப் புத்தகச் சங்கம் (The Madras School Book Society) 1850இல் ஏற்படுத்தப்பட்டது. இச்சங்கம் அளித்த பரிசை முன்னிட்டுப் பல உரைநடை நூல்கள் பலரால் எழுதப்பட்டு வெளியாகியுள்ளன. இதில் இராபின்சன் குருசோ (1867) – வி. விசுவநாத பிள்ளையால் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டது; இந்திய சரித்திரம் (1873) – டி. முத்துக்கிருஷ்ண நாயகர் மொழி பெயர்த்தது; ஷி புத்தகச் சங்கம் வெளியிட்டது. இந்திய வரலாறு ஹேன்றி மோரீஸ் என்னும் மாவட்ட தலைமை அதிகாரி எழுதியது உலக சரித்திரம் (1880) – இது ஷி சங்கம் விரும்பியபடி டாக்டர் ஸ்திமிட் என்பவரால் மொழி பெயர்க்கப்பட்டுச் சென்னை எஸ்.பி.சி.கே.வால் அச்சிட்டு வெளியிடப்பட்டது; 134 பக்கங் கொண்ட உரைநடையாலான நூல். இங்கிலாந்து தேச சரித்திரம் (1858) – ஜி.யூ. போப்பையரால் செய்யப்பட்டு, ஷி புத்தகச் சங்கத்தால் ஸ்காட்டிஷ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது; இது 600 பக்கங்கள் கொண்ட நூல்.

“பாரத கண்டப் புராதனம்” – டாக்டர் கால்டுவெல் பாதிரியாரால் எழுதி வெளியிடப்பட்டது. ஊர், நாடு முதலியவற்றின் வரைபடங்களோடு நில நூல்கள் கவர்ச்சியோடு வெளி நாட்டறிஞர்களால் தமிழில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. வரை பட முறையினையும் தமிழுக்குப் புதிதாகத் தந்த பெருமை அவர்களையே சாரும்.

# 9. பழம் பதிப்பாளர்கள்

தமிழ் ஓலைச்சுவடிகளில் அடங்கிக் கிடந்த இலக்கிய இலக்கண மருத்துவ நூல்களை, முற்காலத்தில் கற்றறிவாளர்களாகத் திகழ்ந்த புலவர் பெருமக்களும் அவர்தம் பரம்பரையினரும் அச்சடிப்பாளர்களும் அரிதின் முயன்று அச்சடித்துப் பதிப்பிக்காமல் போயிருப்பார்களே யானால், நமக்கு இன்று கிடைத்திருக்கும் நூல்களைக் கூடக் கண்ணால் காணமுடியாத நிலைக்கு உள்ளாகி யிருப்போம். ஓலைச் சுவடிகள் நாளடைவில் தும்புதூசி படிந்து மட்கிக் கறையானுக்கு இரையாகிப் போயிருக்கும். இந்த அவல நிலையிலிருந்து காப்பாற்றி, பழங்கால ஓலைச்சுவடிகளிலிருந்து பெயர்த்தெடுத்து, ஒப்புநோக்கி அச்சுப்படுத்திய பழங்காலப் பதிப்பாளர்களுக்கு நாம் எவ்வளவு நன்றி செலுத்தினாலும் தகும்! அவர்தம் பணியை என்றும் மறவாமல் நினைவிற்கொண்டு போற்றி வருவதே தமிழர்தம் பெருங்கடனாக இருக்க வேண்டும்.

இனி, முற்காலத்தில் தமிழ்ப் பதிப்புத் துறையில் ஈடுபட்டு, ஓலைச் சுவடிகளிலிருந்து பெயர்த்து அச்சுப்படுத்திய பழம் பதிப்பாளர்களைத் தெரிந்தவரையில் அறிந்து கொள்வோம். இவர்களது வரலாறு கிடைத்த வரையில் காலவரிசைப்படி முறைப்படுத்தித் தருகிறோம்.

*அ. முத்துச்சாமிப் பிள்ளை ( – 1840):* இவர் பிறந்த ஊர் பாண்டிச்சேரியாகும். இவர் வித்துவான் சாமிநாத பிள்ளையிடம் கற்றவர்; தமிழ் இலக்கண இலக்கிய ஆராய்ச்சி மிக்கவராகவும், இலத்தீன் ஆங்கிலம் தெலுங்கு வடமொழி ஆகியவற்றை அறிந்தவராகவும் விளங்கினவர்; கிறிஸ்தவ வேத விற்பன்னராகவும் திகழ்ந்தவர்; சென்னைக் கல்விச் சங்கத்தின் ஆட்சிப் பொறுப்பாளராக இருந்தவர். "தம் முன்னோர் கையெழுத்தா யெழுதிப் படித்து வந்த செபங்கள், மந்திரங்கள், பிரார்த்தனைகள் முதலியவைகளைப் பரிசோதித்து இலத்தீன் முதலிய மூலபாஷையில் முதனூல்களுக்கிணங்க வொத்திட்டுப் பிழையறத் திருத்தி அவைகளை யொரு புத்தகமாகச் சேர்த்து, 'ஆத்தும வுத்தியான' (1847) மெனப் பெயரிட்டுப் புதுவை மேற்றிராணி யாரவர்கள அநுமதியின் பேரில் அச்சிற் பதிப்பித்தவர்;" வேதவிகற்ப 'திக்காரம்' எனும் அரிய நூலையும் ஆக்கியவர்.

1868–ல் நசரைக் கலம்பகம், 1885–ல் ஞானாதிக்கர் கலம்பகம் எனும் நூல்களை இயற்றியவர். 1820...
வெளியிட்டவர்.

திரு வால்தர் எல்லீஸ் துரையின் கட்டளைக்கிணங்க சென்னைக் கல்விச் சங்கத்துக்காக ஓலைச்சுவடிகளைச் சேகரித்துவருவதற்காக 1816இல் தென்னாடு முழுவதும் சுற்றுப்பயணஞ் செய்து, முதன் முதலாகச் சுவடிகளைத் திரட்டும் பணியில் ஈடுபட்டவர் திரு அ. முத்துச் சாமிப் பிள்ளை அவர்களே ஆவர்.

இவர், வீரமாமுனிவர் இயற்றிய நூல்களின் கையேட்டுப் படிகளைத் திரட்டி, வீரமா முனிவரது வரலாற்றைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி 1840இல் வெளியிட்டவர்; ஷி சங்கத்து திரு ரிச்சர்டு கிளார்க்குடன் சேர்ந்து சில தமிழ் நூல்களையும் எழுதியவர். 1835இல் தாண்டவராய முதலியாருடன் சேர்ந்து இலக்கணப் பஞ்சகங்களில் நன்னூல் மூலமும், அகப்பொருள் மூலமும், வெண்பாமாலையும் அச்சிட்டுப் பதிப்பித்துள்ளார்.

இவரது வரலாறு *அ. முத்துச்சாமிப் பிள்ளையவர்களின் சரித்திரச் சுருக்கம்* என்ற பெயரில் வெளிவந்துள்ளது. இந்நூலில், ''வீரமாமுனிவர் அருளிச் செய்த திருக்காவலூர்க் கலம்பகமும், அன்னையழுங்கலந்தாதியும், தேம்பாவணியிற் சில பாடலும் வண்ணமும், வாமன் சரித்திரமும், புத்தகப் பெயரட்டவணையும் தஞ்சை நகரத்துப் பூங்கொடி சின்ன பிள்ளை குமாரரான மரியப்ப பிள்ளையவர்கள் தம்பி அப்பாவு பிள்ளையென்பவராலும், ஞானதிக்கப் பிள்ளை யென்பவராலும் இரக்ஷணிய ௵ ௲ ௮ ௱ ௪ ௰ ௩ (1843) இல் அச்சிற் பதிப்பிக்கப்பட்டன'' என்று குறிக்கப்பட்டுள்ளது. இதன் விலை ரூ. 1¼ என்றும், தலைப்பில் 'சர்வேஸ்வராய நம' என்றும் போடப்பட்டிருக்கின்றன. இதன் பெயரட்டவணையில், 'தத்துவ போதக சுவாமியருளிச் செய்தது, சாங்கோபாஸ் யருளிச் செய்தது, வீரமா முனிவரும் சித்தானந்த பண்டாரமுஞ் செய்தது' என்று விவரம் தரப்பட்டுள்ளது. இது மொத்தம் 82 பக்கங்கள் கொண்டது. இதன் பின்பக்கத்தில், 'தமிழுக்கும் போர்த்துகீசு வியாக்கியான அகராதி, தமிழும் லத்தீனும் – லத்தீனும் தமிழுமாகிய அகராதி, தமிழும் லத்தீனுமாகிய கொடுந்தமிழிலக்கணம், தமிழும் லத்தீனுமாகிய செந்தமிழிலக்கணம், திருவள்ளுவர் குறளுக்கு லத்தீன் மொழிபெயர்ப்பு' என்றும் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

**புதுவை நயனப்ப முதலியார் (1779–1845):** இவருடைய ஊர் புதுச்சேரி; இவர் தமது 18 ஆவது வயதில் சென்னைக்கு வந்தவர். சென்னை கோட்டைக் கல்லூரிக் கல்விச் சங்கத்தில் தலைமைத் தமிழ்ப் புலவராக இருந்தவர். இவர் ஓய்வு நேரங்களில் ஓலைச்சுவடிகளைத் திரட்டி ஆராய்ந்து, அவற்றில் சிலவற்றைப் பரிசோதித்து அச்சில் பதிப்பித்துள்ளார். அவைகளுள் சிலவற்றின் விவரம்: *1836 – தஞ்சை*

வாணன் கோவை – பொய்யாமொழிப் புலவர் செய்தது. 'இஃது கையெழுத்துப் பிரதிகளிற் பாடந்தோறும் பிழைபடுகின்றனவற்றை விலக்கிச் சுத்த பாடமாக வழங்குவிக்கும் பொருட்டு . . . அகப்பொருளிற்றோற்றுஞ் சங்கையெல்லாந் தீரத் தொல்காப்பிய வழிப்படி செய்தவுரைக்கிணங்கினதாகச் சென்னைக் கல்விச் சங்கத்துப் புலவராகிப் புதுவை நயநப்ப முதலியாராற் பழுதற வராயப்பட்டு . . . சரஸ்வதி அச்சுக்கூடத்திற் . . . பதிப்பிக்கப்பட்டது.'' ஒரு சொற் பலபொருட்டொகுதி உரை பாடம் (1835), தஞ்சை வாணன் கோவை (1836), நேமிநாதம் மூல பாடம் (1836), நாலடியார் (1844), திவாகர நிகண்டு 9, 10 ஆம் பகுதி, சூடாமணி நிகண்டு (1839) 11ஆம் பகுதி வரை அச்சிட்டுப் பதிப்பித்துள்ளார். சித்தாந்த சைவர்களின் உண்மை நிலை எனும் நூலையும் வெளியிட்டுள்ளார்.

இவரது காலத்தில் 'வில்லி புத்தூரரார் பாரத'த்தை அச்சிடுவதற்காக வேண்டி ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அங்குக் கூடிய பெருமக்கள் ஒரு குழுவை ஏற்படுத்தி, அந்நூலைப் பதிப்பிக்கும் பொறுப்பைத் திரு நயனப்ப முதலியாரிடத்திலே ஒப்படைத்தனர். இவர் இதற்காக வேண்டிய சுவடிகளைச் சேர்த்துக்கொண்டிருக்கும்போது திடீரென்று இறந்துபோனார்.

**முகவை இராமானுசக் கவிராயர் (– 1852) :** இவர் இராமநாதபுர மாவட்ட முகவை என்னும் ஊரில் பிறந்தவர். பட்டாளத்தில் சேர்ந்து போர்வீரராக இருந்தவர். பின்னர் மாதவச் சிவஞான முனிவரின் மாணவரான திரு சோமசுந்தரம் பிள்ளையிடம் தமிழ் கற்றுக்கொண்டார். சென்னையில் சஞ்சீவிராயன் பேட்டையில் பிற்காலத்தில் வாழ்ந்தவர். வைணவப் பற்று மிகுந்த இவர் சென்னையில் சொந்தமாக அச்சுக்கூடம் ஒன்றைச் சஞ்சீவிராயன் பேட்டையில் நிறுவி நடத்திவந்தார்.

இவரிடம் திருவாளர்கள் வீராசாமி செட்டியார், களத்தூர் வேதகிரி முதலியார், திருத்தணிகை விசாகப் பெருமாளையர், சரவணப் பெருமாளையர், மற்றும் ஐரோப்பியரான தாம்சன், கிளார்க்கு, ராஜஸ், துரு, போப்பு, இரேனியூஸ் முதலியோர் தமிழைப் பயின்றுவந்தனர். இவர் திருக்குறளுக்கு – வெள்ளுரையும் புத்துரையும் (1840), ஆத்திசூடி (1840), கொன்றை வேந்தன் (1847), வெற்றி வேற்கை (1847) : ஆகிய நறுந்தொகைக்குக் காண்டிகை உரையும் (1847) நீதிநூல்களுக்கு உரையும் எழுதி அச்சிட்டுப் பதிப்பித்துள்ளார். இவ்வுரைகள் இவரது இலக்கண இலக்கியப் புலமையைக் காட்டுவனவாக அமைந்துள்ளன. 1845இல் இனியவை நாற்பது – பழைய உரையுடன் பதிப்பித்துள்ளார். நன்னூலுக்கு விருத்தியுரையும், 1847இல் காண்...
பதிப்பித்துள்ளார். இலக்கணச்...

வெளியிட்டுள்ளார். உவின்சுலோ ஆங்கில தமிழ் அதிகாரதித் தொகுப்புக்கு இவர் மெத்தவும் உதவி செய்துள்ளார். பச்சையப்ப வள்ளல்மீது **பஞ்ச ரத்ன மாளிகை** எனப் புதுவது புனைந்து காண்டிகையுரை செய்து 1848இல் அச்சுப்படுத்தியுள்ளார். மேலும், **பார்த்தசாரதி மாலை, வரதராசப் பெருமாள் பதிற்றுப் பத்தந்தாதி** முதலியவற்றையும் செய்து வெளியிட்டுள்ளார்.

இவருடைய 'நன்னூல் விருத்தியுரை'க்குச் சாத்துக் கவி கொடுத்துள்ளவர்கள்: தொல்காப்பிய வரதப்ப முதலியார், அஷ்டாவதானம் வீராசாமி (செட்டியார்)க் கவிராயர், களத்தூர் வேதகிரி முதலியார் ஆகியோராவர். இவர் **ஆத்மபோதம்** எனும் வடமொழி நூலைத் தமிழில் மொழி பெயர்த்தும் 1848இல் வெளியிட்டுள்ளார். இவர் திருக்குறள் 63 அதிகாரங்களைப் பரிமேலழகர் உரையுடனும் தமது தெளிபொருள் விளக்கத்துடனும், துரு (Drew) என்னும் ஐரோப்பியர் எழுதித்தந்த ஆங்கில மொழிபெயர்ப்புடனும் பகுதி பகுதியாக 1840 முதல் 1862 ஆம் ஆண்டுக்குள் அச்சிட்டுப் பதிப்பித்துள்ளார். இந்நூலை வெளியிட முன்கூட்டியே பலரிடம் கையொப்பம் பெற்று அவ் விவரத்தையும் தமது வெளியீட்டில் தந்துள்ளார். இவர் 'இயற் றமிழாசிரியர் இராமாநுசக் கவிராயர்' எனப் புகழப்பெற்றவராவர்.

**களத்தூர் வேதகிரி முதலியார் (1795 – 1852) :** இவர் களத்தூர் என்னும் ஊரினர். மகாவித்துவானாக விளங்கிய இயற்றமிழாசிரியர் முகவை இராமாநுசக் கவிராயரிடம் தமிழ்க் கல்வி பயின்றவர். இக்கவிராயரால் நிறுவப்பட்ட தமிழ் இலக்கியச் சங்கத்தின் தலைவராக இருந்தவர். மதுரையிலும், புதுவைக் கத்தோலிக்கக் கல்லூரியிலும் தமிழ்ப் புலவராகத் தொண்டாற்றியவர். பிறகு சென்னைக்கு வந்து ஓர் அச்சுக்கூடத்தை அமைத்து நடத்தி வந்தவர்.

இவர் யாழ்ப்பாணத்து "உதய தாரகை" எனும் இதழில் இலக்கண. இலக்கியங்களைப் பற்றி 1841 முதல் 1843 வரையில் கட்டுரைகள் எழுதியுள்ளார். பல இலக்கண இலக்கிய நூல்களிலிருந்து செய்திகளைத் தொகுத்து **இலக்ணக் களஞ்சியம், இலக்கியக் களஞ்சியம்** என்னும் பெயருடன் நூலாக்கி அச்சிட்டு வெளியிட்டுள்ளார்.

இவர் **சூடாமணி நிகண்டின்** பதினோராவது பகுதிக்கு உரையெழுதி 1843இல் அச்சிட்டுப் பதிப்பித்துள்ளார். இவர் 'சூடாமணி'யிற் பதினோராம் நிகண்டினைப் புதுக்கிச் சுமார் 600 செய்யுள்களுள்ள தனி நூலாக அமைத்து, உரையும் வகுத்து, யாழ்ப்பாணத்துச் சங்கத்து வாயிலாக 1842இல் வெளியிட்டனர். 'திருக்குறளுக்கு' உரையெழுதி 1849 இல் பதித்து வெளியிட்டுள்ளார்; 'யாப்பருங்கலக் காரிகை'யை 1851 இல் அச்சிட்டுப் பதிப்பித்துள்ளார்.

நாலடியாரை 1855 லும் அச்சிட்டுப் பகவத்கீதையை 1832 லும், 1859இல் நைடதத்திற்கு உரையெழுதிப் பதிப்பித்துள்ளார். மேலும், பதிப்பித்துள்ளார்: இவர் மனுநீதி சதகம், மனுவியாக்கியான சதகம், நீதி சிந்தாமணி எனும் நூல்களையும் செய்தவர்; இவைகளை யாழ்ப் பாணத்திற்கு அனுப்பியபோது அவை அங்கு அச்சிடப்படவில்லை என்று அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் தமது "19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்" எனும் நூலின் 197ஆம் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

தாண்டவராய முதலியார் (– 1850) : புதுவையையடுத்த குணாம் பேட்டையைச் சார்ந்த வில்லிபாக்கம் என்ற வில்லிய நல்லூரில் பிறந்தவர்; கந்தசாமி முதலியாரது குமாரர். உழலூர் வேலப்ப தேசிகர், தொல்காப்பிய வரதப்ப முதலியார், சீர்காழி வடுகநாதன் தம்பிரான் ஆகியோரிடம் தமிழை முறையாகப் பயின்றவர். ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், இந்துஸ்தானி, மராட்டி, சமஸ்கிருதம் ஆகிய பிறமொழிகளையும் கற்றறிந்தவர். இராமாநுசக் கவிராயருடனும், அவர்தம் மாணவர் சரவணப் பெருமாளையருடனும் இலக்கண இலக்கியங்களைக் குறித்து வாதம் செய்தவர்.

இவர் சென்னைக் கல்விச் சங்கத்துத் தலைமைப் புலவராக 1839வரை இருந்தவர். "இவரிடம் 22 மாணவர்கள் பாடங்கேட்டு வந்தார்கள். அவர்களில் ஒருவர் புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார்" என்று உ. வே. சாமிநாதையர் அவர்கள், 'மீனாட்சி சுந்தரம்பிள்ளை சரித்திரம்' முதற்பகுதியின் 56ஆம் பக்கத்தில் தெரிவித்துள்ளார். திரு தாண்டவராய முதலியார் பதவி உயர்வு காரணமாக விசாகப்பட்டினம் சென்றார். 1843 இல் செங்கற்பட்டு நீதிமன்றத்தின் 'சதர் அமீன்' ஆக, மாவட்ட சுதேச நீதிபதியாகப் பணியாற்றியுள்ளார். ஒரு தமிழ்ப் புலவர்க்கு இத்தகைய பதவி கிடைப்பது அரிதாகவே அக்காலத்தில் இருந்துவந்தது! இவர் ஆங்கிலேயரிடமிருந்து பல நன்கொடைகள் பெற்றவர். இவர் மகன் கிறிஸ்தவராக மாறினார். இவர் உரைநடையில் தமிழ் இலக்கணம் பற்றி இலக்கண வினாவிடையை 1820 லும், பஞ்ச தந்திரக் கதையை மராட்டி மொழியிலிருந்து பெயர்த்து 1826 லும், கதா மஞ்சரியை 1826 லும் எழுதி வெளியிட்டுள்ளார். மேலும், திருத்தணிகை மாலை, திருப்போரூர்ப் பதிகம் முதலியவற்றையும் இவர் இயற்றியுள்ளார். இனி, இவர் பதிப்பித்த நூல்களின் விவரம் : வீரமாமுனிவர் தொகுத்த சதுர் அகராதியின் மூன்று பகுதிகளை 1824 இல் பிறர் உதவியுடன் சேர்ந்து அச்சிட்டுப் பதிப்பித்தார். சூடாமணி நிகண்டு முதல் பத்துப் பகுதிகளை 1839இல் அச்சிட்டுப் பதிப்பித்துள்ளார். இவர் நாலடியாரையும் திவாகரம் முதல் எட்டுத் தொகுதிகளையும் ... செப்பஞ் செய்திருந்தார். பின் ...

கவனமாகச் செய்ய முடியாததால், புதுவை நயனப்ப முதலியாரைத் தம் சார்பில் பதிக்கும்படி அனுமதி கொடுத்தார். அவர் திவாகரம் 9–10ஆம் பகுதிகளையும் பரிசோதித்து அளித்தார். தாண்டவராய முதலியார் பெயரில் அவர் பரிசோதித்த **சேந்தன் திவாகரம்** எட்டுப் பகுதிகள் அச்சிட்டுப் பதிக்கப்பட்டுள்ளது, 1839 இல் கொற்றமங்கலம் இராமசாமிப் பிள்ளை அவர்களின் துணையுடன். "இத் திவாகர நிகண்டு நூலை முதன் முதற் கி.பி. 1835 இல் பதிப்பித்தவர் வித்துவான் தாண்டவராய முதலியார். இவரே பல சூத்திரங்களைப் புதியனவாக இயற்றிச் சேர்த்து அச்சிடுவித்தார்கள். இவ்வாறு புதுக்கிய திவாகரமே இப்போது வழங்குவது. இப் பதிப்பின் தலைப்புப் பக்கம் வருமாறு : புத்தகங் டோறு மொன்றிற் கொன்றொவ்வாது வழூஉக்களாற் பொதிவுற்றுக் கிடந்தமையா லவ் வழூஉக்களைப் பல புத்தகங்களைக் கொண்டு களைந்தும், வேண்டுமிடத்துப் புதுச் சூத்திரங்கள் செய்து உடுக்குறியிட்டுச் சேர்த்தும், பெயர் பிரித்தும் ... அச்சிற் பதிக்கப்பட்டது" என்று திரு **ச. வையாபுரிப் பிள்ளை,** தமது புறத்திரட்டுகள் எனும் நூலின் 206ஆம் பக்கத்தில் எடுத்துக்காட்டி யிருப்பது இங்கு நினைவுப்படுத்தத்தக்கதாகும்.

1835இல் இலக்கணப் பஞ்சகங்களில் **நன்னூல் மூலமும் அகப்பொருள் மூலமும்** புறப்பொருள் இலக்கியத்தோடு **வெண்பாமாலை மூலமும்** தாண்டவராய முதலியாரும் அ. முத்துச்சாமிப் பிள்ளையும் சேர்ந்து அச்சிட்டுப் பதிப்பித்துள்ளனர். 1880இல் **மன்மத விலாசம்** எனும் நாடக நூலையும் இவர் வெளியிட்டுள்ளார். தாண்டவராய முதலியார் 1850இல் இறந்துபோனார்.

**மழவை மகாலிங்கையர் :** இவர் மதுரைக்குக் கிழக்கே உள்ள மழவராயனேந்தல் எனும் ஊரில் பிறந்தவர்; வீரசைவ மரபினர். சென்னையில் திருத்தணிகை விசாகப் பெருமாளையர், சரவணப் பெருமாளையர் என்னும் வீர சைவர்களிடம் தமிழ் பயின்றவர்; இலக்கண அறிவு நிரம்பியவர்; விரைந்து செய்யுள் இயற்றும் திறம் படைத்தவர்; இசைப்பற்று மிக்கவர்; அஞ்சா நெஞ்சத்தினர்; பெரும் புலவர்களுடன் நட்புரிமையுடன் இருந்தவர்; திருவாவடுதுறை ஆதீன வித்துவானாக இருந்த தாண்டவராயத் தம்பிரானுக்கு உயிர்த் தோழராக விளங்கியவர்; ஆறுமுக நாவலர் மொழிபெயர்த்து உதவிய தமிழ் விவிலியத்தைப் படித்துப் பார்த்துப் பிழையற்று நன்றாக இருக்கின்றது என்று பாராட்டியவர்; சென்னை மாகாணக் கல்லூரியின் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். 1840இல் இவரால் பரிசோதிக்கப் பட்ட **திருக்குறள் மூலம்** சென்னைக் கல்விக் களஞ்சிய அச்சுக்கூடத்தில் அச்சிட்டுப் பதிக்கப்பட்டது. 1856இல் இவரால் பாடப்பெற்ற **மழவைச் சிங்காரச் சதகம்** களத்தூர் ஆறுமுக முதலியாரது இலக்கணக் களஞ்சிய அச்சுக்கூடத்தில் அச்சிட்டுப் பதிக்கப்பட்டது. **பெரிய புராணம்** இவரால்

நூதனமாகச் செய்யப்பட்ட வுரையுடன் சரஸ்வதி விலாச அச்சுக் கூடத்தில் வீரணத் தோட்டம் கோவிந்த நாயகரால் அச்சடிக்கப்பட்டு, சாலிவாகன சகம் 1767 குரோதி ஸு த்தில் அச்சிட்டுப் பதிக்கப் பட்டுள்ளது. இந்நூலுள் உரை செய்தவரைப் பாராட்டி வேதகிரி முதலியாரும் தாண்டவராயத் தம்பிரானும் பாடிய சாத்துக் கவிகள் சிவலிங்கம்போல் அச்சடிக்கப்பட்டுள்ளன. இவர், **அருணாசல புராணம்** எனும் நூலை 1850 இல் அச்சிட்டுப் பதிப்பித்துள்ளார்; மேலும் **தமிழ் இலக்கணச் சுருக்கம்** எனும் நூலை எழுதி 1879 இல் பதிப்பித்துள்ளார். **போதக வாசகம்** என்னும் ஒரு நூலும் இவரால் செய்யப்பட்டது. இவர்தாம் முதன்முதலாகத் **தொல்காப்பியம்** எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியர் உரையுடன் பல பிரதிகளைக் கொண்டு பரிசோதித்து 1845 இல் சென்னைக் கல்விக்கூட அச்சகத்தில் அச்சிட்டுப் பதிப்பித்தவராவார்.

**திருத்தணிகை விசாகப் பெருமாளையர்** : இவர் சாலி வாகன சகம் 1720 சரியான பிங்கல ஸு ஆனி மீ 24 உ (1798) பிறந்தவர். இவர் திருத்தணிகைக் கந்தப்பையர் எனும் வீரசைவரின் மூத்த மகனாவார். இளையவர் திருத்தணிகை சரவணப் பெருமாளையர். இவர்கள் இருவரும் இயற்றமிழாசிரியர் இராமாநுசக் கவிராயரிடம் கல்வி பயின்றனர். விசாகப் பெருமாளையர் சென்னை மாகாணக் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக இருந்தவர்; உவின்ஸ்லோ தமிழ் அகராதிக்குத் துணைபுரிந்தவர். **இலக்கணச் சுருக்க வினாவிடை** என்னும் நூலை 1828 லும், **பாலபோத இலக்கணம்** என்னும் நூலை 1852 லும் எழுதி அச்சிட்டவராவர். **அணியிலக்கண வினாவிடை** (1875), **யாப்பிலக்கண வினா விடை, கல்விப் பயன்** என்னும் நூல்களையும் எழுதி வெளியிட்டவர். **திருகோவையாருக்கு** உரை யெழுதி 1897இல் அச்சிட்டுப் பதிப்பித்துள்ளார். இவர் நன்னூலுக்குக் காண்டிகையுரையுடன் 1840இல் எழுதிப் பதிப்பித்துள்ளார். இது 1868, 1879, 1882லும் அச்சிடப்பட்டது. இவரை இலக்கண விசாகப் பெருமாளையர் என்றும் கவிராயர் என்றும் அழைத்துவந்தனர். இவருக்குச் சென்னையில் கல்வி விளக்க அச்சகம் ஒன்று இருந்தது. இவரும் இவருடைய இளவல் சரவணப் பெருமாளையரும் சேர்ந்து, திருவள்ளுவரும் **திருவள்ளுவ மாலையும்** என்ற நூலை 1830இல் அச்சிட்டுப் பதிப்பித்துள்ளனர்.

**சரவணப் பெருமாளையர்** : இவர் திருத்தணிகை கந்தப்பையரின் இளைய மகனாவார்; பிங்கல வருடம் பங்குனி மீ இரண்டாந் தேதி (1799) பிறந்தவர்; விசாகப் பெருமாளையரின் இளவல். இவரும் இராமாநுசக் கவிராயரிடம் கல்வி பயின்றவர். 1830 இல் இவர் **திருக்குறளைப் பரிமேலழகருரையுடனும்**, 1849 இல் தெளிபொருள் விளக்கவுரையுடனும் அச்சிட்டுப் பதிப்பித்துள்ளார். 1830 இல் **'அருணகிரியந்தாதி'**யையும், 1832 இல் ... யையும்,

1835 இல் திருக்கருவைப் பதிற்றந்தாதி மூலபாடத்தையும், 1836இல் கந்தரலங்காரத்தையும் சுத்த பாடமாகப் பதித்துள்ளார். மேலும், இவர் கொன்றை வேய்ந்தோனுரை, திருவள்ளுவமாலையுரை, நைடதவுரை, 1842 இல் கைக்கிளைப் படலம் வரையிலும், 1841இல் நல்வழியுரை, நறுந்தொகையுரை, நன்னெறியுரை, நான்மணி மாலையுரை, பிரபுலிங்கவுரை (மாயையுற்பத்திப் படலம் வரை), வாக்குண்டாம் உரை (1841), வெங்கைக் கோவையுரை ஆகியவற்றையும் அச்சிட்டுப் பதித்துள்ளார். இவர் நாலடியார், திருவிளையாடற் புராணம் (1850), திருவாசகம் (1857) முதலிய நூல்களையும் பரிசோதித்து அச்சிற் பதிப்பித்துள்ளார்.

**இயற்றமிழ்ச் சுருக்கம், இலக்கணச் சுருக்க வினாவிடை, அணியியல் விளக்கம், கோள தீபிகை (1839), நான்மணிமாலை, குளத்தூர்ப் புராணம்** என்பவைகளையும் இவர் இயற்றியுள்ளார். குணங்குடி மஸ்தான்மீது இவர் பாடியதே ''நான்மணிமாலை''.

இவர் 'பயன்படத்தக்க பல தமிழ் நூல்களை வெளியிட்டவர்' என்று திரு தி. செல்வக்கேசவராய முதலியார் தமது ''தமிழும் தமிழரும்'' (1896) எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**திரு வேங்கடாசல முதலியார்:** இவர் சென்னைக் கல்விச் சங்கத் தமிழ்ப் புலவராக இருந்தவர்; சென்னையில் சரஸ்வதி அச்சுக்கூடம் ஒன்றை நடத்திவந்தார். அழகிய மணவாளதாசர் இயற்றிய – **திருவேங்கடத்தந்தாதி திருவரங்கக் கலம்பகம், திருமாலிருஞ்சோலை மலை அழகரந்தாதி, திருவரங்கத்தந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி** முதலியவற்றை இவர் 1830இல் பிழையறப் பரிசோதித்துப் பதிப்பித்துள்ளவர். பல நூல்களுக்கு இவரே அச்சடுக்கிக் கொடுத்துள்ளார். **ஸ்ரீ கிருஷ்ண பகவான் தூது (1869), இராம நாடகம் (1850), பிரகலாதன் விலாசம் (1860), அரிச்சந்திர புராணம்** – மூலமும் உரையும் (1869) ஆகிய நூல்களையும் இவர் பதிப்பித்துள்ளார். இவர்தாம் முதன் முதலாகக் கம்பராமாயணத்தைக் காண்டம் காண்டமாக வெளியிட்டவர்; பாலகாண்டம் முதல் அச்சுப் பதிப்பு (1848), **ஆரணிய காண்டம் (1844)** முதல் 600 பாடல்கள் வரை.

**சந்திரசேகர கவிராச பண்டிதர் ( – 1883):** சோழநாட்டுத் தில்லையம்பூர் இவரது பிறந்த ஊராகும். சென்னையில் பெரும்புலவர்களாகத் திகழ்ந்த விசாகப் பெருமாளையர், சரவணப் பெருமாளையர் என்பவர்களிடத்தில் கல்வி பயின்றவர்; சித்தூர் உயர்நிலைப் பள்ளியிலும் கும்பகோணம் கல்லூரியிலும் தமிழாசிரியராக இருந்தவர். திரு பொன்னுசாமித் தேவர் அவர்களின் விருப்பத்திற்கிணங்கத் தனிப்பாடல்களைத் திரட்டித் **தனிப்பாடல்கள் திரட்டு** எனும் பெயரில் அச்சிட்டுப் பதிப்பித்துள்ளார். தம் ஆசிரியர்கள்

இயற்றிய பாலபோத இலக்கணம், நன்னூற் காண்டிகையுரை, ஐந்திலக்கண விடை முதலிய நூல்களையும் இவர் பதிப்பித்துள்ளார். மேலும், நன்னூல் விருத்தியுரை, யாப்பருங்கலக் காரிகையுரை, வெண்பாப் பாட்டியல் உரை, செய்யுட் கோவை, பழமொழித் திரட்டு, அரபத்த நாவலர் இயற்றிய பரதநூல் முதலிய பழைய நூல்களை ஏட்டுச் சுவடிகளிலிருந்து பரிசோதித்து அச்சிட்டுப் பதிப்பித்துள்ளார். தண்டியலங்கார மூலத்தையும், அதற்குச் சுப்பிரமணிய தேசிகரால் இயற்றப்பட்ட உரையையும் பல படிகளை ஒப்பிட்டுப் பார்த்து அச்சில் பதிப்பித்துள்ளார். வருஷாதி நூற் சித்தாந்த விளக்கமும் அறுபது வருஷ பலனும் என்னும் பழைய சோதிட நூலையும் ஆராய்ந்து 1875இல் அச்சேற்றியுள்ளார்.

வி. கோவிந்த பிள்ளை (– 1890) : இவர் திரிசிரபுரத்தில் பிறந்த வைணவர்; 'வித்துவ ஜனசேகரர் கோவிந்த பிள்ளை' என அழைக்கப் பட்டவர். திரிசிபுர மலைக்கோட்டை மௌனசாமி மடத்து வேலாயுத முனிவரிடத்தில் தமிழ் பயின்றவர்; இவரோடு உடன் பயின்றவர் திரிசிபுர மகாவித்துவானாக விளங்கிய மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆவர்.

திரு கோவிந்த பிள்ளை – இராச மன்னார் கோயில் தல புராணம் ஷ கோயில் அலங்காரக் கோவை என்னும் செய்யுள் நூல்களை இயற்றியவர். கம்பராமாயண சுந்தர காண்டத்துக்கும் சடகோபரந்தாதி முதலிய நூல்களுக்கும் உரை எழுதியுள்ளார். கம்பராமாயணம் முழுவதையும் அச்சிற் பதிப்பித்த பெருமை இவருக்கு உண்டு. நாகைப் புராணம் (1898) பதிப்பித்துள்ளார்.

த. சிவக்கொழுந்து தேசிகர் : இவர் கும்பகோணத்துக்கு அருகிலுள்ள கொட்டையூர் எனும் கோடீச்சுரத்தில் பிறந்தவர்; சரபோஜி மன்னரின் (1798 – 1832) அவைப் புலவராக இருந்தவர்; சரபேந்திர வைத்திய முறைகள், சரபேந்திரர் வைத்தியம், சரபேந்திரர் சன்னிரோக சிகிச்சைகள் என்னும் நூல்களை எழுதினவர். திரு தாண்டவராயர் கேட்டுக்கொண்டதற்கிணங்கிச் சென்னைக் கல்விச் சங்கத்துப் புலவராகப் பணியாற்றிவந்தார். திருத்தணிகை விசாகப் பெருமாளையரும் சிவக்கொழுந்து தேசிகரும் சேர்ந்து 1857ஆம் ஆண்டில் திருவாசகத்தை ஏட்டுச்சுவடியிலிருந்து பெயர்த்தெழுதி அச்சிற் பதிப்பித்தார்கள். இதுவே முதன்முதல் அச்சிடப்பட்ட திருவாசகமாகும்.

சிவக்கொழுந்து தேசிகர் கோட்டீசுவரக் கோவை (1836), பெருவுடையாருலா (1837), சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் முதலியவற்றையும் இயற்றியுள்ளார்.

காஞ்சிபுரம் சி. எஸ். ...

என்று அழை...

பிள்ளையும் இவரைத் தம் ஆசிரியராகக் கருதி மரியாதை தந்துள்ளார். இவர் உரையாசிரியர் எனவும் சிறப்பிக்கப்பட்டவர்; சைவத் திருமுறைகளை முதலில் பதிப்பித்தவர். இவரது தேவாரப் பதிகங்கள் – 'திருஞான சம்பந்த சுவாமிகள் திருமுறை' 1864இல் சென்னை கலாநிதி அச்சுக்கூடத்தில் அச்சிட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. பிரமோத்தரக் காண்டப் பொழிப்புரையையும், சைவ சமய விளக்க வினாவிடையையும் இவர் வெளியிட்டுள்ளார். இச் சைவ சமய விளக்க வினா விடையை ரெவ். டி. ஃபவுல்க்ஸ் (T. Foulkes) என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். "The work contains a useful compendium of Saivism" என்று ஜான் மர்டாக் தமது நூலில் கூறியுள்ளார்.[1]

நீதிநெறி விளக்கவுரை, திருக்கழுக்குன்றச் சிலேடை போன்ற நூல்களையும் இவர் செய்துள்ளார். திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதியை 1837இல் திருவேங்கடாசல முதலியாரது சரஸ்வதி அச்சுக்கூடத்தில் பரிசோதித்து அச்சிட்டுப் பதிப்பித்துள்ளார். பல நூல்கள் இவரது மேற்பார்வையில் அச்சிட்டுப் பதிக்கப்பட்டுள்ளன.[2]

திருஞான சம்பந்த சுவாமிகள் தாலாட்டு, திருக்குழந்தை வடிவேலன் பிள்ளைத் தமிழ் (1896), அருணாசலசதகம் (1913).

காஞ்சிபுரம் சபாபதி முதலியார் 1870இல் பெரிய புராணம் பதிப்பித்தார்; இதில் 4299 பாடல்கள் தரப்பட்டுள்ளன. ஆறுமுக நாவலர் 1884இல் பதிப்பித்ததில் 4286 பாடல்கள் உள்ளன.

காஞ்சிபுரம் சபாபதி முதலியார் பெயரில் சென்னை கொண்டித் தோப்பில் ஒரு தெரு உள்ளது.

**அம்பலவாண பண்டிதர் (1814 – 1879) :** இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள கோப்பாய் என்னும் ஊரில் பிறந்தவர்; சேனாதிராய முதலியாரிடம் கல்வி கற்றவர். சேனாதிராய முதலியார் பாடிய 'நல்லை வெண்பா'வை (1878)யும் 'நீராவிக் கலிவெண்பா'வையும் அச்சிட்டுப் பதிப்பித்துள்ளார்.

**அம்பலவாண நாவலர்:** இவர் யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டை என்னும் ஊரில் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிறந்தவர்; சொற்பொழிவாற்றுவதில் மிக்க திறமை பெற்று விளங்கினவர்;

---

1. See J. Murdoch's "Classified Catalogue of Tamil Printed Books", page 77.

2. 'பரம ரகசிய மாலை'' – 1836இல் பதிக்கப்பட்டுள்ளது. 1866இல் தேவாரத் திருப்பதிகத் திருமுறையைக் கலாநிதி அச்சுக்கூடத்தில் இவர் அச்சிட்டுப் பதிப்பித்துள்ளார். 1867இல் சுந்தரமூர்த்தி பதிகமும் திருநாவுக்கரசர் பதிகமும் பதிக்கப்பட்டன.

சிதம்பரத்தில் இறந்து போனார். இவர் அப்பைய தீட்சிதர் செய்த 'பிரம தர்க்கஸ்தவம்' என்னும் நூலைத் தமிழில் மொழிபெயர்த்தவர். இவர் திருச்சுழியற் புராணம், நடன வாத்திய ரஞ்சனம், சண்முக சடாச்சரப் பதிகம் முதலிய நூல்களைப் பதித்துள்ளார்.

**அருணாசல சதாசிவம் பிள்ளை (1820 – 1896) :** இவர் யாழ்ப் பாணத்து மன்னிப்பாய் என்னும் ஊரில் பிறந்தவர்; கிறிஸ்தவரானதால் ஜே. ஆர். அர்னால்டு என அழைக்கப்பட்டார்; உதயதாரகை என்னும் இதழை நடத்தியவர். இவர் சாதாரண இதிகாசம் (1858), இந்துதேச சரித்திர நூல் (1858), வான சாத்திரம் (1881), பாவலர் சரித்திர தீபகம் (1886), இல்லற நொண்டி (1887) இது செய்யுளாலானது, வெல்லையந்தாதி (1890), கீர்த்தனா சங்கிரகம் (1880); கிறித்துவ சமய நூல்களான மெய்வேதா சாரம், யேசுநாதர் திருச்சதகம் (1850), நன்னெறி மாலை, நன்னெறிக் கொத்து, நன்னெறிக் கதா சங்கிரகம் (1893), சற்போத சரணம் முதலியவற்றையும் எழுதி வெளியிட்டார். 1858இல் உரிச்சொல் நிகண்டு (12 தொகுதி) அச்சிட்டுப் பதிப்பித்துள்ளார்.

**இராசநல்லூர் இராமச்சந்திர கவிராயர்:** தொண்டை மண்டலத்திலுள்ள இராச நல்லூரில் பிறந்து சென்னையில் வாழ்ந்தவர். சென்னைக் கல்விச் சங்கத்தின் தமிழ்ப் புலவராக இருந்தவர்; முத்தமிழ் வல்லவராக விளங்கியவர். இவரும் தாண்டவராய முதலியாரும் சேர்ந்துதான் 1824இல் முதன்முதலாக வீரமாமுனிவர் தொகுத்த சதுரகராதியை அச்சிற் பதிப்பித்தனர். திரு. இராமச்சந்திர கவிராயர் சகுந்தலை விலாசம், தாருக விலாசம், இரங்கூன் சண்டை நாடகம், இரணிய வாசகப்பா, மகாபாரத விலாசம் சூது துகிலுரிதல் என்னும் நாடக நூல்களை இயற்றி வெளியிட்டுள்ளார். இவரது சகுந்தல விலாசத்தை ஜி. தேவரேஸ் (G. Deverze) என்பவர் 1886 – 87 இல் பிரஞ்சு மொழியில் மொழி பெயர்த்துள்ளார்.

**அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார்:** இவர் இராமாநுசக் கவிராயரின் மாணவர்; சென்னைப் பல்கலைக்கழகத்தில் தலைமைத் தமிழாசிரியராக இருந்தவர். இவர் அகராதித் தொகுப்பு வேலையில் ஈடுபட்டிருந்தவர். ''தினவர்த்தமானி'' எனும் கிழமை இதழில் அவ்வப்போது இவர் எழுதிவந்த கட்டுரைகளைத் தொகுத்து விநோதரசமஞ்சரி (1879) எனும் பெயரில் ஒரு நூலை வெளியிட்டார். இந்நூல் பல பதிப்புகளாக வெளியிடப்பட்டுள்ளது.

**மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்** ... 1876):
இவருடைய தந்தையார் ...

இவருடைய முன்னோர் திருக்கோயிலுக்குரிய முத்திரைக் கணக்கருள் மீன முத்திரைப் பணிக்குரியவர்களாக இருந்துவந்தனர்; தமிழ்க் கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாகவும் விளங்கினவர். பின்பு திருச்சிப் பகுதியில் வந்து வாழ்ந்துவந்தனர். இத்தகையவர்களின் வழித் தோன்றலாகத் திருச்சிக்கு அருகிலுள்ள அதவாத்தூர் என்ற ஊரில் மேற் கூறிய இருவருக்கும் மகனாய் 6–4–1815இல் பிறந்தவர் திரு மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள்.

இவர் இளமையில் தந்தையாரிடம் கல்வி பயின்று நினைவாற்றல் மிக்கவராக விளங்கினார். தமக்கு வேண்டிய எல்லா நூல்களையும் தாமே ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதிப் படித்துவந்தார். பழஞ் செய்யுள்களைப் படிப்பதும் புதுக்கவிகளை இயற்றுவதும் இவரது பொழுதுபோக்குச் செயல்கள். இவருடைய தந்தையார் இறந்தபோது, தமது 15ஆவது வயது முதற்கொண்டு குடும்பப் பொறுப்பினை ஏற்று நடத்தவேண்டியவரானார். இவர்தம் தந்தை சிதம்பர வாத்தியார் மாணவர்களுக்குப் பாடம் சொல்லியே புகழ் பெற்று விளங்கிக் குடும்பத்தை நடத்திவந்தவர். அவரது மறைவுக்குப் பின், அவரை அடி யொற்றியே மீனாட்சி சுந்தரம் பிள்ளை நடந்துகொள்ள வேண்டிய வரானார்!

இவர் திருச்சி மலைக்கோட்டைக் கீழைவீதியில் உள்ள வீட்டில் முதலில் வாழ்ந்துவந்தார்; காவேரியாச்சி என்பவரைத் திருமணஞ் செய்துகொண்டார். பின்னர் ஷெ மலைக்கோட்டைக்குத் தெற்கு வீதியில் இவருக்கெனச் சொந்தமாக வீடு அமைத்துக்கொண்டார்.

அக்காலத்தில் திரிசிரபுரத்தில் சிறந்து விளங்கிய மருதநாயகம் பிள்ளை, அப்பாவையர், ஆறுமுகம் பிள்ளை, வீரராகவ செட்டியார், முத்துவீர உபாத்தியாயர் முதலான தமிழ்ப் புலவர்களிடம் அண்டி அரிய நூல்களைப் பாடங்கேட்டும், ஏடுகள் பெற்றும் தமது தமிழறிவை முன்பைவிடப் பெருக்கிக்கொண்டார் மீனாட்சிசுந்தரம் பிள்ளை. சைவரான இவர், வைணவ நூலான கம்பராமாயணம் முழுவதையும் தம் கையாலேயே மூன்று முறை எழுதிப் படியோலை (பிரதி) பண்ணியுள்ளார்!

“மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் நல்ல தோற்றமுள்ளவர்; மாநிற வடிவினர்; நல்ல உயரமும், அகன்ற நெற்றியும், முழங்கால்வரை கைகளும், யானையைப் போன்ற நடையும் பருத்த உடலும் கொண்டு விளங்கினவர்; முகப்பொலிவு மிக்கவர் சிவக்கோலம் பூண்டவர்’ என்று இவர்தம் மாணவரான உ. வே. சாமிநாதையரால் சித்தரிக்கப்பட்டுள்ளார்.

இவர் இன்பமாகக் காலை 6 மணிமுதல் 10 மணிவரை மாணவர்களுக்குப் பாடம் சொல்லிவந்தார். இவர் எத்தனை நேரம் பாடம் சொல்லிவந்தாலும், கேட்பவர் மனம் சலிப்படையாமல்

இன்பமாகக் கேட்டுக்கொண்டேயிருப்பார்களாம். அவ்வளவு சுவையாகப் பாடஞ் சொல்லுவதில் தேர்ந்தவராக விளங்கினார் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்.

இவர் திருவாவடுதுறை ஆதின வித்துவானாகவும் திகழ்ந்தார். அம்மடத்து வேலை நிமித்தம் சென்னைப் பட்டினத்திற்கு வரும் போதெல்லாம், இங்குச் சிறந்து விளங்கிய புலவர்களான காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியாரிடம் புராணங்களிலுள்ள ஐயங் களையும், திருவம்பலத்தின்னமுதம் பிள்ளையிடம் கோவைகளிலுள்ள நுட்பங்களையும், திருவேங்கட முதலியாரிடம் கம்பராமாயணம், பாகவதம், திவ்வியப்பிரபந்தங்களிலுள்ள ஐயங்களையும் கேட்டுத் தெளிவடைவது வழக்கம். முன்பு சென்னையில் கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் திருவாவடுதுறை ஆதீனத்துக்குரிய மடம் ஒன்று இருந்தது. சென்னையிலிருந்த திருத்தணிகை விசாகப் பெருமாளையர், அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார், புரசை சபாபதி முதலியார் ஆகியோரிடம் அளவளாவிச் செல்வதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார் மீனாட்சிசுந்தரம் பிள்ளை. சென்னையில் ஓராண்டுக் காலம்வரை தங்கியிருந்து, மேற் சொன்ன புலவர்களிடம் இன்பமாகப் பேசித் தமது அறிவை வளர்த்துக்கொண்டார். இராமலிங்க அடிகளைக் கண்டு பேசிச் செல்வதும் உண்டு என்றும் சொல்வர்.

திரிசிபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை தமது கடுக்கனை விற்று, ஆறுமாதத் தொகையை முன்னதாகக் கொடுத்து, கீழ்வேளூர்ச் சுப்பிரமணிய தேசிகரிடம் இலக்கண விளக்கப் பாடம் கேட்டுள்ளார் என்றால், அவருக்குக் கல்விப் பெருக்கில் இருந்த ஆர்வத்தையும் ஊக்கத்தையும் ஒருவாறு நாம் அறிந்துகொள்ள முடியும். கல்விச் செல்வத்தைப் பெற அவர் எவரிடமும் செல்லத் தயங்கமாட்டார். அதே போல் தாம் பெற்ற கல்வியைப் பிறர்க்கு அளிக்கவும் அவர் எப்போதும் தயங்கியது கிடையாது.

பல தமிழ் நூல்களை, ஒவ்வொன்றிலும் ஒரே அளவுள்ளதாகச் சுவடிகளில் எழுதி வைத்துக்கொள்வதில் மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்குப் பெருவிருப்பம் இருந்தது. பாடம் சொல்வதில் இவருக்கு இயல்பாகவே இருந்த பெருவிழைவும் கடைசிவரை அடங்காமலே இருந்திருக்கிறது!

இவர் தம்மிடம் வந்து கற்க விரும்பும் மாணவர்களுக்கு, அவர்களது சாதி, மதம், கொள்கை என வேறுபாடு காட்டாமல் பாடம் சொல்வது வழக்கம்; அதனைத் தம் கடமையாகவும் கொண்டிருந்தார். அவர் பாடம் சொல்லும் திறமையை அறிந்தும், அவர் காட்டும் அன்பைத் தெரிந்தும், நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ... யற்றவர்களும் அவரிடம் ...

ஏழை மாணவர்களுக்கு வேண்டிய உணவு, உடை, உறையுள் யாவும் அளித்து, அவர்களுக்குக் கல்விச் செல்வத்தை வரையாது வழங்கிப் பயன் கருதாது அருந்தொண்டாற்றியுள்ளார் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள்.[1] தம்மிடம் வந்து படித்த மாணவர்களுக்குத் தம்மிடம் இல்லாத ஏட்டுச்சுவடிகளை விலைக்கு வாங்கிக் கொடுத்தும், அவர்களில் திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் செய்துகொள்ள உதவி செய்தும் உள்ளார் இப்பேராசிரியர்! இவ்வகைகளுக்காக வேண்டிப் பங்களூரிலிருந்தும் பிற இடங்களிலிருந்தும் தமக்குக் கிடைத்த வெகுமதிகளையும் செல்வத்தையும் மெல்ல மெல்ல நாளடைவில் செலவு செய்து மீனாட்சி சுந்தரனார் வெறுங்கையராகியுள்ளார்! தம் மாணவர்க்கு எவரேனும் தீங்கு செய்தால் பொறுக்கமாட்டாத பேரன்பு மிக்க பேராசிரியர் அவர்! அப்படிப் பட்டவர்களைக் கடிந்து பேசிவிடும் குணக்குன்று அவர்! இத்தகைய கல்விக் கண்ணைத் திறந்துவைத்த விரிந்த உள்ளம் படைத்தவரை – மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களைத் தவிர வேறு ஒருவரையும் 19ஆம் நூற்றாண்டில் காணமுடியவில்லை; 20ஆம் நூற்றாண்டிலும் காண்பதற்கு இயலாது!

திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களிடம் பயின்ற எந்த மாணவரும், அவர் பெற்றிருந்த கல்விச் சிறப்பும், கொடைச் சிறப்பும், சாதிசமய பேதமற்றுப் பாடஞ் சொல்லிவந்த தனிச் சிறப்பும் பெற்றிருக்கக் காணோம்! அவரிடம் பாடங்கேட்ட அறிவையும், அவரால் பெற்ற செல்வாக்கையும் கொண்டு தம்மை உயர்த்திக் கொண்டவரே இருந்தனர்! தம் ஆசிரியரைப் பின்பற்றிச் சாதி சமய வேறுபாடு கருதாது பயன் கருதாத் தொண்டினைச் செய்ய எவரும் பிற்காலத்தில் முன்வந்தாரில்லை.

இவரிடம் பாடங் கேட்டவர்களில் ஒருசிலரைப் பற்றி இங்குக் குறிப்பது சிறந்ததாக இருக்கும்.

இவருடைய இளம்பிராயம் முதற்கொண்டு பழகிய **வித்துவான் தியாகராச செட்டியார்,** இவர்தம் தலைமாணாக்கராகக் கருதப்பட்டவர். இவர் பூவாளூரில் வாணிபத்திலும் பயிர்த் தொழிலிலும் புகழ் பெற்றிருந்த சிதம்பரஞ் செட்டியாரின் மகனாவார்; 'இவர் பிள்ளை அவர்களிடம் பாடம் கேட்க வந்தது குரோதி ஆண்டிலாகும். ஒரு

1. Even as late as the XIX century, we know, Mahavidwan Meenakshi Sundaram Pillai symbolized in himself the teacher, the school, the books and the library, and even the school hostel; he arranged not only for the midday meals but the full round of three meals a day for his pupils, and also for their clothing -" M. Arunachalam, M.A., in his `Education in Ancient Tamilnad (1969), pp. 65-66.

நிமிடமேனும் மீனாட்சி சுந்தரம் பிள்ளையைவிட்டுப் பிரியாதிருந்தவர் இவர். பிள்ளையவர்கள் செட்டியாரிடம் வைத்திருந்த அன்பும் ஒப்பற்றது' என்கிறார் பிற்கால மாணவராக வந்த திரு உ.வே. சாமிநாதையர். பிள்ளையவர்களது கவிச்சுவையை நன்கு அறிந்து அதில் ஈடுபட்டவர்களுள் தியாகராச செட்டியார் முதல்வராக இருந்தார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். தியாகராச செட்டியார் 'சிறவாதவற்றையும் சிறப்பிக்க வல்லவராகத் திகழ்ந்தவர்'. இவர் இல்லாமல் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் எந்த நூலும் அரங்கேறுவதில்லை! இவர் ஒருவரே தம் ஆசிரியரை நோக்கி, "இளமைப் பருவத்தில் நீங்கள் பணத்தின் அருமையை அறிந்ததுபோல இப்பொழுது அறிந்துகொள்ளவில்லை. உங்களுக்கு என்னைப் போலச் சொல்பவர்கள் ஒருவருமில்லை" என்று செல்லமாகக் கண்டிக்கக்கூடிய உரிமை பெற்றிருந்தவர்! இவர் தம் ஆசிரியர் இயற்றிய பல நூல்களை அச்சுப்படுத்திப் பதிப்பித்துள்ளார்.

ஆறுமுக நாவலர் போன்றவர்களுக்குத் தம் ஆசிரியருடன் சிறப்புப் பாயிரம் தரும் தகுதியையும் தியாகராச செட்டியார் பெற்றிருந்தார்! இவர் கும்பகோணம் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தவர்; தமது ஆசிரியர் அவ்வூருக்கு வரும்போதெல்லாம் விடுமுறை எடுத்துக்கொண்டு அவரைக் காணச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தவர். இவர், தம் பதவியை விட்டு விலகிக்கொண்டபோது, திரு உ.வே. சாமிநாதையரின் குடும்பநிலையைக் கருதி, அவருக்குத் தாம் இருந்த பதவியைக் கிடைக்கும்படி பரிந்துரை செய்து வாங்கித்தந்தவர்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் மற்றொரு புகழ் பெற்ற மாணவர் பாலக்கரை சோடசாவதானம் **தி.க. சுப்பராய செட்டியார்**: இவர் மிகவும் நினைவாற்றல் மிக்கவர். பதினாறு அவதானங்களைச் செய்து முடித்ததால் 'சோடசாவதானம்' என்ற பட்டத்தைப் பெற்றவர். இவரும் தம் ஆசிரியரின் சில நூல்களை அச்சிட்டுப் பதிப்பித்துள்ளார். மேலும், இவர் **சிலப்பதிகாரப் புகார்க் கண்டத்தை** முதன்முதல் 1870இல் தமது உரையுடன் அச்சிட்டுப் பதிப்பித்தவர்; வேறு பல நூல்களையும் இவர் பதிப்பித்துள்ளார். அவைகளைப் பற்றிய விவரம் தனியாக இவரைப் பற்றிக் கூறும்போது தரப்படும்.

வரகனேரி **சவரி முத்தா பிள்ளை** என்னும் செல்வர், பிள்ளையவர்களின் மாணவர்களில் ஒருவர்; ஆசிரியரை நன்கு ஆதரித்து வந்தவர்.

இன்னொரு மாணவர் **பங்களூர் தேவராச பிள்ளை**. இவர் பிள்ளையிடம் பாடங்கேட்...

சூதசங்கிதையையும் பிள்ளையவர்கள் இயற்றித் தந்து, தமது மாணவர் பெயராலேயே வெளியிட்டுக்கொள்ளும்படி அனுமதி வழங்கினார். மாணவரும் தக்கபடி ஆசிரியரைப் பாராட்டி ரூ. 5,000 மும் உயர்ந்த பீதாம்பரமும் காணிக்கையாகக் கொடுத்தனுப்பி வைத்தார்.

பிள்ளையவர்களிடம் படித்தவர்களுள் பல சாதியினரும் சமயத்தினரும் இருந்தனர்; பிராமணர்களில் – ஸ்மார்த்தரும், வைஷ்ணவர்களும், மாத்வர்களும் இவரிடம் பாடங்கேட்டனர். கிறிஸ்தவர்களில் **புதுவை சவரிராயலு நாயகரும், மாயூரம் வேதநாயகம் பிள்ளையும், சவேரிநாதப் பிள்ளையும்** இருந்தனர். மகம்மதியர்களில் நாகூரில் புகழ்பெற்று விளங்கிய **குலாம் காதர் நாவலரும்** ஒருவர் ஆவர். அவரவர் சமய நூல்களில் தமிழில் இயற்றப்பட்டுள்ளவற்றை அவர்கள் விரும்பிய வண்ணம் பிள்ளையவர்கள் சமயபேதமின்றிப் பாடம் சொல்லிக்கொடுப்பார்.

தம் மாணவருள் பிரியமானவரும் தம்மை ஆதரித்தவர்களுள் ஒருவருமான மாயூரம் வேதநாயகம் பிள்ளை மீது மீனாட்சி சுந்தரம் பிள்ளை **ஐந்திணைக் கோவை** ஒன்றை 1853இல் இயற்றினார். அது குளத்தூர்க் கோவை எனவும் அழைக்கப்பட்டது. வேதநாயகம் பிள்ளை இயற்றிய **நீதிநூலுக்காகப்** பிள்ளையவர்கள் வடலூர் வந்து, இராமலிங்கம் பிள்ளையிடம் சாத்து கவி பெற்றுச் சென்றுள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

இராமநாதபுரம் **அழகிரி ராஜு** என்பவரும் பிள்ளையவர்களிடம் பாடங்கேட்ட மாணவர்களுள் ஒருவர். இவர் பிற்காலத்தில் பாண்டித்துரைத் தேவர்க்கு இளமையில் தமிழாசிரியராக அமர்த்தப் பெற்றிருந்தவர். **இலக்கணம் இராமசாமிப்பிள்ளையும்** மீனாட்சி சுந்தரனாரின் மாணவரே. இவர் இலங்கையைச் சேர்ந்த சர். பி. இராமநாத முதலியார்க்கு ஆசிரியராக விளங்கியவர் என்று அம் முதலியாருடைய வரலாற்றால் தெரியவருகிறது.

கண்ணுள்ளவர்களுக்கு மட்டுமன்றிக் கண்பார்வை அற்றவர்களுக்கும் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாடம் சொல்லிவந்தார். **தேவகோட்டை நாராயண செட்டியாருக்குக்** கண்ணொளி கிடையாது. ஆனால், அவர் நுண்ணறிவு மிக்கவர். மற்றொருவர் படிக்க இவர் பாடங் கேட்பார். இவருக்கு 'வன்றொண்டர்' என்ற அடைமொழியும் உண்டு. இவர் ஒருமுறை மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாட 'சேக்கிழார் பிள்ளைத் தமிழுக்கு' அடியெடுத்துக் கொடுக்க, பிள்ளையவர்கள் அதனைத்தொடர்ந்து இருந்துபாடி முடித்துக் கொடுத் துள்ளார்.

வைதிக சமயத்தைச் சேர்ந்த திரு உ.வே. சாமிநாதையர், மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் 1872 முதல் 1876 வரை நான்காண்டுகளே பாடங் கேட்ட மாணவர். தொடக்கத்தில் தமக்குப் பாடஞ் சொல்லும்படி அங்கே வந்திருந்த பழைய மாணவரொருவருக்குப் பிள்ளை அவர்கள் கட்டளையிட்டார் என்று ஐயரே 'மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம்' இரண்டாம் பாகம் 10ஆம் பக்கத்தில் செப்பியுள்ளார்.

அவர் தியாகராச செட்டியாரிடமும் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடமும் பாடங் கேட்டுத் தமது தமிழ்க் காதலைத் தீர்த்துக்கொண்டார்! தமக்குமுன் பழகியவர்களைப் பற்றி மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரத்தில் முதற் பாகமாகவும், தாம் படிக்க வந்தது முதற்கொண்டு இறுதிக் காலம்வரை இரண்டாம் பாகமாகவும் டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் எழுதியுள்ளார். இவராலேயே பிள்ளையவர்களின் வரலாறும், குணநலன்களும், அவரது கவியியற்றும் திறமையும், அவர் படைத்த கோவை, பிரபந்த, புராண நூல்களும் நமக்குத் தெரியவருகின்றன. மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் 1815 முதல் 1876 வரை உள்ள 61 ஆண்டுக் கால வாழ்க்கையையும், பழங்காலப் பாடஞ் சொல்லும் முறையையும், பழங்காலப் புலவர்களின் பெருமையையும் நாம் நன்கு அறிந்துகொள்ள இவரது நூலே அடித்தளமாக இருக்கின்றது. வெங்கட்டராமன் என்ற இவரது இயற்பெயரைச் சாமிநாதன் என வழங்கச் செய்தவரும் இவர்தம் ஆசிரியப் பெருமானே ஆவர்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களால் 22 தல புராணங்களும், 6 பிற காப்பியங்களும், 51 பிரபந்தங்களும், கணக்கற்ற தனிப் பாடல்களும் இயற்றப்பட்டுள்ளன என்பது ஐயர் குறிப்பாலே தெரியவருகின்றது. லாலி பாடல்கள், கப்பற் பாட்டு, மங்களம், வாழ்த்து, சாத்து கவிகள், கீர்த்தனைகளையும் பிள்ளை அவர்கள் படைத்துக் கொடுத்துள்ளார்.

கம்பர், எல்லாருக்கும் தெரிந்த கதையான 'இராமாயணத்'தைப் பதினாயிரம் பாடல்களில் பாடியுள்ளார். ஆனால், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களோ முன்னவரைப் போல ஒரு கதையைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு தமது புலமையையும் கற்பனையையும் காட்டாது, தல புராணங்களாகவும், பிரபந்தங்களாகவும், தனிப்பாடல்களாகவும் எத்தனையோ பதினாயிரம் பாடல்களை மிக எளிதாகப் பாடிக் குவித்துள்ளார்!

மேலும், பிள்ளையவர்களைப் போல் ... ஆசிரியர்களுக்குக் ...

சபாபதி முதலியார் இங்கே (கும்பகோணம்) வந்திருந்தபொழுது, அவரைத் தம் வித்யா குருவென்று சொல்லி இவர்கள் (மீனாட்சி சுந்தரம் பிள்ளை) மிகவும் பாராட்டினார்கள். அன்றியும், அவருக்கே முதல் இடத்தைக் கொடுத்துத் தாம் அப்பால் இருந்தார்கள்.''[1]

மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் 26ஆவது வயதில் திருவானைக்காத் திரிபந்தாதியைப் பாடினார். இவருடைய பாடல்கள் எதில் தொடங்கி எப்படி வளர்ந்து பெருகின என்பதை இவரது மாணவரான உ.வே. சாமிநாதையர் அவர்கள் மிக அழகாகக் கூறியுள்ளார்: 'திரிபந்தாதி'களில் தளிர்த்து, 'திரிபுர யமக அந்தாதி'யில் அரும்பி, 'அகிலாண்ட நாயகி மாலை'யிற் போதாகிய அப்புலவர் சிகாமணியினது கவித்திறனும் புகழும் 'அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழில்' மலர்ந்து நின்றன. இவரினும் சிறந்த கவிஞரொருவர் இலரென்ற பெருமதிப்பும் மரியாதையும் அப்பக்கத்தில் எங்கும் பரவலாயின.''[2]

இவர் இயற்றிய பெருங்காப்பியங்களுள் **தியாகராசலீலையே** முதலில் செய்யப்பட்டது. இது மொத்தம் 669 திருவிருத்தங்களைக் கொண்டது. **நாகபட்டினப் புராணத்தைத்** தமது 58 ஆவது வயதில் இவர் பாடினார்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள், தம் முன்னோர் சென்ற வழியிலேயே இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தமிழின் சுவையை மாந்தி, அதன் மீதுள்ள அன்பும் ஆர்வமும் மரபும் குன்றாமல் இருக்க வேண்டி, பிரபந்தங்களைத் தமக்கு ஏற்ற வாயிலாகக் கொண்டார். இந்த வகையில் இவர் 19ஆம் நூற்றாண்டில் சிறந்து விளங்கிய கச்சியப்ப முனிவரையே பின்பற்றினார். பல பிரபந்தங்களைப் பாடி அரங்கேற்றி மக்கள் மத்தியில் பழைய சுவையுணர்ச்சியும் மரபும் அழியாவண்ணம் பார்த்துக்கொண்டார். அதே சமயத்தில் காப்புப் பருவம், அவையடக்கம் முதலியவற்றையும் புதியதாக உடன்சேர்த்துப் பாடினார். பிற்காலத்தவர், முன்னவர் போக்குகளை நன்றாக உணர்ந்துகொள்வதற்கு உதவியாகவே, இவர் திரிபந்தாதி, யமகவந்தாதி ஆகியவற்றையும் பாடினார். தமிழ் மரபையும், தாம் உயிராகப் போற்றிய சைவ மரபையும் யாவரும் அறிந்துகொள்ள வேண்டிப் பிள்ளையவர்கள் யமகம், திரிபு, உலா, பிள்ளைத்தமிழ், கோவை போன்ற வகைகளில் ஏராளமாகப் பாடிக் குவித்தார். இவர் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும்

1. ''மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம்'', முதல் பாகம் உ. வே, சாமிநாதைய்யர், பக்கம், 269.

2. ''மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம்'', முதல் பாகம். பக்கம் 53–55.

நால்வகைக் கவிகளிலும் மிகத் தேர்ச்சி பெற்றிருந்தார். இவர் பாடியவற்றுள் மிகவும் சுவையுடையதாகத் திகழ்வது சேக்கிழார் பிள்ளைத் தமிழாகும்.

ஒரு மகாகவியைவிட மேலானவர் மகாவித்துவான் என்று கூறப்படுகிறது. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் வித்துவானாகவும், பல வித்துவான்களுக்கும் மேலான மகாவித்துவானாகவும் விளங்கியவர். அவர் பாடி அரங்கேற்றியவற்றுள் சிலவே அவருடைய மாணவர்களால் அச்சிட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

நல்ல முறையான கல்வியும், பாடல் இயற்றும் ஆற்றலும், உரையோடு செய்யுள்களையும் பாராமலே மடைதிறந்ததுபோல் எந்நேரமும் சொல்லும் நினைவாற்றலும் கொண்டவர் பிள்ளையவர்கள். கற்றவர்களிடத்தும், மடங்களிலும், செல்வந்தர்களிடத்தும் வேறு எவர்க்கும் அக்காலத்தில் கிடைக்காத பெருஞ்செல்வாக்கும் புகழும் அவருக்குக் கிடைத்திருந்தன. மேலும், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் ஏராளமான இலக்கிய இலக்கண ஏட்டுச்சுவடிகள் திரட்டி வைக்கப்பட்டிருந்தன. அவர் எண்ணியிருந்தால், ஏட்டுச் சுவடிகளிலே இருந்த பல அருமையான நூல்களை நல்ல திருத்தமான பாடத்துடன் அச்சிட்டுப் பதித்திருக்க முடியும். அவரது காலத்திலும் அவருக்குப் பிற்காலத்திலும் பலருக்குக் கிடைத்த செல்வாக்கையும் பொருளீட்டத்தையும் எல்லாரைக் காட்டிலும் தமது தனித் தகுதிகளின் காரணமாக அவர் அடைந்திருக்க முடியும். ஆனால், அப்பெரும் புலவர் மாணவருக்குப் பாடஞ் சொல்வதுடனும், கற்றவர்களுடன் அளவளாவுவதுடனும், நூல்களை அரங்கேற்றிச் சன்மானம் பெற்று, அத்தொகையைச் சேர்த்துவைக்காது தம் மாணவர்களுக்கே பல வழிகளில் செலவழித்துவிடுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்; அதிலேயே பேரின்பம் கண்டவர் அவர். என்றாலும், பலருடைய வேண்டுகோளுக்கிணங்கி மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் எல்லப்ப நாவலர் இயற்றிய செவ்வந்திப் புராணத்தை 1851லும், காஞ்சிப் புராணத்தின் முதற்பாகத்தையும், திருவானைக்காப் புராணத்தையும், கல்லாடம் மூலத்தைமட்டும் ஓலைச்சுவடியில் இருந்தபடியே 1868லும் அச்சிட்டுப் பதிப்பித்துள்ளார்.

இவர் நூல்களில் காந்திமதி பிள்ளைத் தமிழ் 1852லும், குளத்தூர்க் கோவை 1853லும், சீகாழிக் கோவை 1861லும், அம்பலவாண தேசிகர் பிள்ளைத் தமிழ் 1863லும் தியாகராச செட்டியாரால் அச்சிட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. சென்னையிலிருந்த இவர்தம் மாணவரான தி. க. சுப்பராய செட்டியாரால், 1868இல் மாயூரப் புராணமும், 1867இல் மங்களாம்பிகை பிள்ளைத் தமிழும், 1867இல் புதுச்சேரி சத்திரம் தானப்பாசாமி... திருநாகைப் பு...

சென்னை மயிலைச் சித்திர சத்திரப் புகழ்ச்சி மாலையை இவர் பாடியதற்காகச் சென்னை வியாசர்பாடி விநாயக முதலியார் 100 வராகன் பரிசிலாக் கொடுத்துள்ளார்! கும்பகோணப் புராணம் இவர் பாடி அரங்கேற்றியபோது, இவருக்குச் சால்வை, பட்டுத் துணிமணிகள் முதலிய சன்மானங்களுடன் ரூ 2,000மும், மேனா பல்லக்கும் கொடுத்து, அதை முதலில் தக்க பிரபுகளில் சிலர் தாமே சில தூரம் சுமந்து சென்று, தமிழ் மொழி மீதும் இவர்மீதும் உள்ள அன்பைப் புலப்படுத்தியுள்ளனர். இன்னும் இவருடைய நூல்கள் பல ஊர்களில் அரங்கேறிய போதெல்லாம், அவ்வூரில் செல்வர்கள் தங்களால் இயன்ற சன்மானத்தை வழங்காது வெறுமனே இவரை அனுப்பிவைத்ததில்லை. என்றாலும், மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் தமக்கு நாளைக்கு வேண்டுமே என்று எடுத்துவைக்கும் பழக்கம் இல்லாதவராக இருந்தார்; வரவுக்குமேல் செலவு செய்யக் கூடியவராக இருந்தார். ஆகவேதான், வருவாய் வந்துங்கூட வறுமை அவரைப் பிடித்துக்கொண்டிருந்தது; விட்டபாடில்லை!

என்றாலும், மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் தமிழ்க் கல்விமான்களுக்குள் அக்காலத்தில் 'சக்கரவர்த்தியாக'வே திகழ்ந்தார். கற்றவர்களேயன்றித் திருவாவடுதுறை ஆதீனத் தலைவர், கோடக நல்லூர் சுந்தர சுவாமிகள், காமகோடி சங்கராச்சாரியார் போன்ற வர்களும் இவருக்கு உரிய மரியாதை கொடுத்துச் சிறப்பளித்துள்ளனர்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பணத்திற்குத் தாம் அடிமை யாகாமலே காலந்தள்ளி வந்தவர். எவ்வளவு வறிய நிலையில் தம் கொள்கைக்கு மாறன எதையும் செய்யாத நெஞ்சுரம் மிக்கவராக இருந்தவர். கல்விச் செல்வத்தைத் தவிர வேறு எச்செல்வத்தையும் அவர் மதியாதவராகவே காணப்பட்டார். பிறர் செய்த நன்றியை மறவாது போற்றும் குணமுடையவராக விளங்கினார். மாணவர்களேயன்றிப் பிறர் சுற்றத்தாரல்லர் என்பது அவரது நோக்கமாக இருந்தது!

தமிழ் நாட்டிலுள்ள தமிழ்ப் புலவர்களுக்கெல்லாம் தலைவராகவும், மாபெரும் புலவராகவும், மாணவர்களிடத்தில் தாயன்பு கொண்ட வராகவும் விளங்கிய இக் கல்வி வள்ளல், நோய்வாய்ப்பட்டு, தமக்குப் பல்லாற்றானும் உதவி புரிந்துவந்த சவேரிநாத பிள்ளை என்னும் கிறிஸ்தவ மாணவர் மார்பில் சார்த்திக்கொள்ள 1–2–1876இல் தம் 61ஆம் வயதில் உயிர்நீத்தார். தமிழ்க் கடலாக விளங்கிய மாபெரும் புலவரின் உடல், ஈமப் பள்ளியில் வைத்து எரிக்கப்பட்டு, முடிவில் பிடி சாம்பலாகிவிட்டது!

# 7. முற்கால அச்சகங்கள்

முற்காலத்தில் தமிழகத்திலுள்ள சென்னைப் பட்டினத்திலும் பிற வெளியிடங்களிலும் அச்சகங்கள் கிறிஸ்தவப் பாதிரிமார்களாலும் ஏனைய மதத்தினராலும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அவைகள் சரிவரப் புதிவு செய்யப்படாததனால் முழு விவரங்களும் தெரிய முடியவில்லை. மர்டாக் தமிழ் நூல் விவரப் பட்டியலிலிருந்தும், தமிழ்அரசு வெளியிட்டுள்ள நூல் விவரப் பட்டியலிலிருந்தும், நூல்களின் தலைப்பேட்டிலிருந்தும் கீழ்க்காணும் விவரங்கள் கிடைத்த தரப்படுகின்றன. பிறைக்கோட்டுள் உரிமையாளர் பெயரும் முகவரியும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

சென்னை நகர்: 1779 – வேப்பேரி மிஷன் பிரஸ், 1812 – சர்ச் மிசியோன் அச்சுக்கூடம் (இது போபம்ஸ் பிராட்வேயில் இருந்தது), 1813 – சென்னைக் கோட்டைக் கல்லூரி பிரஸ் (சென்னைக் கல்விச் சங்கத்து அச்சுக்கூடம்), 1830 – ரவானா அச்சுக்கூடம் (இது மேடவாக்கம் சேஷாசல முதலியாருடையது), 1831 – செயின்ட் ஜார்ஜ் கெஜெட் பிரஸ், 1834 – கல்வி விளக்க அச்சுக்கூடம் (இது ஓட்டேரி குசப்பேட்டையில் இருந்தது; திருத்தணிகை கந்தசாமி ஐயர் இதனை முதலில் நடத்திவந்தார்; பின்னர் விசாகப் பெருமாளையருடையதாகியது; இது 1889இல் பூம்பாவை சிங்கார முதலியாருடையதாக மாறியது), 1834 இயற்றமிழ் விளக்க அச்சுக்கூடம் (கே. திரு. வேங்கட முதலியாருடையது) 1836 – மதராஸ் லாரன்ஸ் அனாதைகள் பிரஸ் (மலைச்சாலையில் இருந்தது; பிறகு இந்த இடத்தில் சென்னை அரசாங்க அச்சுக் கிளை அமைக்கப்பட்டிருந்தது), 1840 – மதராஸ் அமெரிக்கன் பிரஸ் (தங்க சாலை வீதி, பெத்தநாயக்கன் பேட்டையில் இருந்தது; பின்னர் போபம்ஸ் பிராட்வேயில் நடைபெற்றுவந்தது), 1834 – 1841 – சரஸ்வதி அச்சுக்கூடம் (திரு கே. வேங்கடாசல முதலியாருடையது), 1844 – வாணிவிலாச இலக்கிய அச்சுக்கூடம் (கோட்டா பாஷ்யம் செட்டியாரது), 1844 – திராவிட தீபிகை அச்சுக்கூடம் (எழும்பூரில் இருந்தது), ரிகார்ட் பிரஸ், 1845 – கல்விக் கடல் அச்சுக்கூடம் (திருவண்ணாமலை வீரபத்திரையரது), ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடம் (குளத்தூர் வேலு முதலியாரது), வித்வரக்ஷாமிர்த அச்சுக்கூடம், 1846 – பாரதி அச்சுக்கூடம், 1847 – இராமாநுச கவிராயர் அச்சுக்கூடம் 1849 – ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடம் 1849 – முத்தமிழ் பாஷை அச்சுக்கூடம் (முத்துசாமி முதலியாரது), 1848 – முத்தமிழ் மணிப்பிரவாள அச்சுக்கூடம் (...

பிரபாகர அச்சுக்கூடம் (மோப்பேர் சாமி நாய்க்கன் வீதி, சிந்தாதிரிப் பேட்டையிலிருந்தது; நெல்லு மண்டி வெ. நாராயணசாமி முதலியாரது), 1850 – இந்து அச்சுக்கூடம், ஸ்ரீநிகவசம்பா சாஸ்திர தீபிகை அச்சுக்கூடம் 1852 – சரஸ்வதி விலாச அச்சுக்கூடம் (சதுரங்கப்பட்டினம் அண்ணாமலை முதலியாரது), 1853 – விவேக கல்வி விளக்க அச்சுக்கூடம், விவேக விளக்க அச்சுக்கூடம் (புரசை), 1854 – இலக்கணக் களஞ்சியம் பிரஸ் (இலக்கண அச்சுக்கூடம்), இது 103, அவதானம் பாப்பையர் தெரு, சூளையில் இருந்தது; களத்தூர் வேதகிரி முதலியாராலும் அவரது குமரர் கந்தசாமி முதலியாராலும் நடத்தப் பெற்றுவந்தது), 1855 – மெய்ஞ்ஞான விளக்க அச்சுக்கூடம் (பாரிப்பாக்கம் முனியப்ப முதலியாரது), 1856 – சண்முக விலாச அச்சுக்கூடம் (நுங்கம்பாக்கம் இரத்தின முதலியாரது), 1857 – சென்னை வர்த்தமான தரங்கிணி முத்திராக்ஷரசாலை (குச்சிலிக் கடைத் தெரு, பார்க் டவுன், சென்னையில் ஆர்க்காடு முத்தியாலு நாயகராலும், பூவாடை வெங்கட்ட ராவாலும் நடத்தப்பெற்றுவந்தது), 1859 – ஸ்காட்டிஷ் பிரஸ் (ஸ்காட்டிஷ் மிஷனரிகள் நடத்தியது), கல்விக் களஞ்சிய அச்சுக்கூடம் (சைதை உமாபதி முதலியாரது), கலைமகள் விலாச அச்சுக்கூடம் (பெரியபாளையம் அகத்தீசுவர முதலியாரது), கலைமாது விளக்கம் பிரஸ் (23, நம்மாழ்வார் தெரு, சென்னை; (கனகராய முதலியாரது), கலைமகள் நிவாலை செந்தமிழ் அச்சுக்கூடம் (குத்தம்பாக்கம் ப. பாலகிருஷ்ண முதலியாரது), 1860 – வாணி நிகேதன் அச்சுக்கூடம், 1863 – மெய்ஞ்ஞான சூரியோதய விலாச அச்சுக்கூடம், 1866 – கலாநிதி அச்சுக்கூடம் (பால்குரிசி குமாரரையருடையது), நீதிசார விளக்க அச்சுக்கூடம் (ஞானோதய சபையுடையது; சென்னை ஆனைக்கௌனி வெங்கட்டராய சந்திலிருந்தது), 1873 – ஸ்ரீநிகேதன அச்சுக்கூடம் (சென்னை பத்தி இராமாநுசலு நாயுடுவினுடையது), பெத்து நாயகன் பேட்டை விநாயக முதலி வீதியில் நிறுவப்பட்டிருந்தது. இலட்சுமி விலாச அச்சுக்கூடம் (துண்டையார்ப்பேட்டையில் S.P. கிருஷ்ணசாமி பிள்ளையுடையதாகவும், சைதை துலக்காண செட்டியாருடையதாகவும் இருந்ததுள்ளது.) 1876 – மிமோரியல் அச்சுக்கூடம் (சென்னை, தம்பு செட்டித் தெருவில் இருந்தது). 1879 – கார்டியன் அச்சுக்கூடம், 1875 – பாஸ்டர் பிரஸ், 1881 – கலா ரத்னாகர அச்சுக்கூடம் (கலாவர்த்தக சபை ஊ. புஷ்பரத செட்டியாருடையது; இரண்டாம் உலகப் போர்வரை சென்னையில் மிகச் சிறப்புறத் தமிழ் நூல்களை அச்சிட்டு வெளியிட்டு வந்துள்ளது.) 1883 – அஷ்ட லக்ஷ்மி விலாச அச்சுக்கூடம், 1886 – சர்வ ஜநார்த்தன அச்சுக்கூடம், வித்வ ரக்ஷாமிர்த அச்சுக்கூடம், 1879 – வித்தியாநு பாலன யந்திரசாலை (யாழ்ப்பாண ஆறுமுக நாவலரது; தற்போது தங்கசாலை வீதியில் நடைபெற்றுவருகிறது.) வித்யா விநோத

அச்சுக்கூடம், வித்யா ரத்நாகர அச்சுக்கூடம், 1894 – மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம் (சை. இ ரத்தின செட்டியார் நிறுவியது; சென்னை, தம்பு செட்டித் தெருவில் இருந்த புகழ் பெற்ற அச்சகம்; முற்காலத்தில் எல்லா வகையான நூல்களையும் அச்சிட்டும், பதிப்பித்தும், வெளியிட்டும் வந்த நிறுவனமாகும். இது இரண்டாம் உலகப் போருக்குப்பின் (1945)இல் புதுக்கோட்டை இராமச்சந்திரபுரக்காரருக்கு விற்கப்பட்டு, இன்றும் அங்கு நடைபெற்றுவருகிறது). 1899 – கல்வி விளக்க அச்சுக்கூடம் (புங்கத்தூர் ம. சபாபதி முதலியாருடையதாகியது), தாம்ஸன் & கோ பிரஸ் (இது தற்போது மினர்வா பிரஸ் என்ற பெயரில் இயங்கிவருகிறது); 1900 – மதராஸ் இந்து தியாட்டிரிக்கல் பிரஸ் (இந்து தியாலஜிகல் பிரஸ்), ஸ்டார் ஆஃப் இந்தியா பிரஸ், நேஷனல் அச்சுக்கூடம், அத்நீயம் அண்ட் டெய்லி நியூஸ் பிராஞ்ச் பிரஸ் (மலைச் சாலையில் இருந்தது; டி. சில்வாவுடையது.) 1905 – கோபால விலாச அச்சுக்கூடம், 1909 – கோல்டன் பிரஸ், 1917 – மநோன்மணி விலாச அச்சுக்கூடம் (கொண்ணூர் மாணிக்க முதலியாருடையது), பாப்புலர் அச்சியந்திரசாலை, பூமகள் விலாச அச்சுக்கூடம் (அமரம்பேடு இரங்கசாமி முதலியாரது) அல்பீனியன் அச்சுக்கூடம், ஆதி கலாநிதி அச்சுக்கூடம், (ம. வெங்கடசாமி நாயகரது), ஆதி வித்யாவிலாச முத்தி ராக்ஷர சாலை, ஆரியர் முத்தமிழ் வாணி பீடம் அச்சுக்கூடம், இந்து நிதி அச்சுக்கூடம் (93, அண்ணா பிள்ளைத் தெரு, சென்னை; அருணாசல முதலியாரது), உவிக்டர் பிரஸ் (161, பிராட்வே சென்னை), கமர்ஷியல் அச்சுக்கூடம், கிருபா லட்சுமி விலாச அச்சுக்கூடம் (17, தாண்டவராய பிள்ளை வீதி சென்னை; அமரம்பேடு கிருஷ்ணசாமி முதலியாரது); சற்குண நிதி அச்சுக்கூடம் (வரதராஜுலு நாயுடுக்குரியது), சிரோன்மணி விலாச அச்சுக்கூடம் (பி.நா. சிதம்பர முதலியாரது), சிடி பிரஸ் (13, அர்மீனியன் தெருவில் இருந்தது), சென்டிரல் பிரஸ், தத்துவபோதினி அச்சுக்கூடம் (செந்தோம், மயிலாப்பூர்), திராவிட ரத்தினாகரம் அச்சுக்கூடம் (சூளையிலிருந்தது; இராசகோபால் செட்டியாரது), பரப்பிரம்ம முத்தி ராக்ஷரசாலை (திருவொற்றியூரிலிருந்தது; சென்னை பரசுராம முதலியாரது); வி.என். ஜூபிலி அச்சுக்கூடம், வேதாந்த வித்தியாவிலாச அச்சுக்கூடம், ஹோபர்ட் பிரஸ், ஸ்ரீவாசவாம்பா சரஸ்வதி தீபிகை முத்திராட்சர சாலை, பூரண சந்திரோதய அச்சுக்கூடம் (சிந்தாதிரிப்பேட்டையில் இருந்தது), நேஷனல் சொசைட்டி பிரஸ் (ராயப்பேட்டையில் நடந்தது).

அடிஸன் அண் கோ பிரஸ், அத்வைத விளக்கம் என்னும் அச்சுக்கூடம், அமெரிக்கன் ஆர்க்காட் மிஷன் பிரஸ், அர்ச். சூசையப்பர் அச்சுக்கூடம், அல்பினியன் அச்சுக்கூடம், ஆதிகலாநிதி அச்சுக்கூடம், ஆதி வித்வ மனோரஞ்சனி அச்சுக்கூடம்,

ஆறுமுக விலாச அச்சுக்கூடம், இந்தியன் அச்சுக்கூடம், இந்து யூனியன் அச்சு யந்திரசாலை, இம்பீரியல் பிரஸ், இலக்கிய விளக்க அச்சுக்கூடம், எக்ஸெல்ஸியர் அச்சுக்கூடம், எகோ பிரஸ், எம். சி. பிரஸ், எம்பிரஸ் ஆஃப் இண்டியா பிரஸ், ஏஷியாடிக் பிரஸ், ஐரிஷ் பிரஸ், கமலாலய விலாச அச்சுக்கூடம், கலைக்கியான விளக்க அச்சுக்கூடம், கவிரஞ்சனி அச்சுக்கூடம், கலாநிதி அச்சுக்கூடம், காஸ்மோ பெர்லைட் பிரஸ், கீர்வாண வாணி விலாச அச்சுக்கூடம், கே. ஆர். வெட்கடராமணையர் அண்ட் கோ அச்சுக்கூடம், சந்திரபாநு அச்சுக்கூடம், சந்திரமௌலி பிரஸ், சற்குணாநிதி அச்சுக்கூடம், சாரதாம்பா நிலைய அச்சுக்கூடம், சி. கே. எஸ். பிரஸ், சித்தாந்த சைவப் பிரகாச யந்திரசாலை, சிவசாமி விலாச அச்சுக்கூடம், சிவஞான போத யந்திரசாலை, சிவாநந்த நிலைய அச்சுக்கூடம், சிற்றம்பல விலாச பிரஸ், சுந்தர விலாச அச்சுக்கூடம், செயின்ட் ஜோஸப் பிரஸ், சென்டிரல் அமெரிக்கன் பிரஸ், சைவப் பிரகாச அச்சியந்திரசாலை, சென்னை கிறிஸ்து மார்க்கக் கல்வி அபிவிருத்தி சங்கத்தார் அச்சுக்கூடம், சென்னை அரசினர் அச்சகம், சுதேசமித்திரன் அச்சுக்கூடம், டியூக் ஆஃப் எடின்பர்க் பிரஸ், திருமகள் விலாச அச்சுக்கூடம், திருவருட் பிரகாச யந்திரசாலை, தொண்டை மண்டல அச்சியந்திரசாலை, நிரஞ்சனி விலாச அச்சியந்திரசாலை, பண்டித மித்திரன் பிரஸ், பாப்புலர் அச்சகசாலை, பிரம்மோ ஆர்பன் அசைலம் பிரஸ், பிரின்ஸ் ஆஃப் வேல்ஸ் பிரஸ், பீபில்ஸ் ஃபிரெண்டு பிரஸ், மகாராணியார் கைத்தொழிற் பாடசாலை அச்சுக்கூடம், மாதவ நிவாச அச்சுக்கூடம், மீனாட்சியம்மை கலாநிதி அச்சுக்கூடம், முத்தமிழ் விலாச அச்சுக்கூடம், மெதாடிஸ்ட் எப்பிஸ்கோப்பல் பிரஸ், ராபின்ஸன் பிரஸ், லலிதா பிரசன்னோதயம் பிரஸ், லீலா நிலைய அச்சுக்கூடம், வர்த்தமான தரங்கிணி அச்சுக்கூடம், வர்த்தமான தரங்கிணி சாகை அச்சுக்கூடம், வித்யா தரங்கிணி அச்சுக்கூடம், வித்யாபாநு அச்சியந்திரசாலை, வித்யா விலாச முத்திராக்ஷரசாலை, வித்வன் மோதரங்கிணி பிரஸ், வெள்ளைய நாடார் பிரஸ், வெஸ்ட் பிளாக் டவுன் பிரஸ், வேத விநாயகர் அச்சுக்கூடம், வேதாந்த வித்யா விலாச அச்சுக்கூடம், வைசிராய் பிரஸ், வைஜயந்தி பிரஸ், ஜனோபகாரிணி பிரஸ், ஜீவகாருணா விலாசம் பிரஸ், ஸரஸ்வதி பண்டார முத்திராக்ஷரசாலை, (திருவல்லிக்கேணி), ஸுகவிரஞ்சனி முத்ராக்ஷரசாலை, ஸ்ரீ சாரதா விலாச அச்சுக்கூடம்; ஸ்ரீ தயாநிதி அச்சுக்கூடம், ஸ்ரீ நிகேதன அச்சியந்திர சாலை, ஸ்ரீ பத்மநாப விலாக அச்சுக்கூடம், ஸ்ரீ மட்டுவார் குழலாம்பாள் அச்சுக்கூடம், ஸ்ரீ ரஞ்சனி அச்சுக்கூடம், ஸ்ரீ லட்சுமி நாராயண விலாச அச்சுக்கூடம், ஸ்ரீ லலிதா யந்திரசாலை.

**வெளியூர்களில்:** மனோன்மணி விலாச அச்சுக்கூடம், கொண்ணூர்; சந்திர விலாச அச்சுக்கூடம், பூவிருந்தவல்லி; பரப்பிரம்ம முத்திராக்ஷரசாலை, திருவொற்றியூர்.

காஞ்சி: இயற்றமிழ் விளக்க அச்சுக்கூடம், ஸ்ரீ காஞ்சி பூஷண அச்சுக்கூடம், சின்னக்காஞ்சிபுரம், ஸ்ரீ காஞ்சிபூஷண முத்திராக்ஷர சாலை.

திருப்பதி: கலைக்கியான முத்திராக்ஷர சாலை.

சித்தூர்: வித்யாவினோத அச்சுக்கூடம்.

மசூலிப்பட்டணம்: சி. எம். எஸ். டோவ் பிரஸ்.

வெண்காடு: வேதவிநாயகர் அச்சுக்கூடம்.

தக்கோலம்: விவேக சந்திரோதய அச்சுக்கூடம்.

சிதம்பரம்: சண்முக சுந்தர விலாச யந்திரசாலை, சித்தாந்த வித்தியாநுபாலன யந்திரசாலை, பிரம்ம வித்யா பிரஸ், லோகமாதா அச்சக்கூடம்.

கூடலூர்: தேசாபிமானி அச்சுக்கூடம், பேட்ரியட் பிரஸ்.

நாகப்பட்டினம்: நீலலோசனி பிரஸ், ஸ்காட்டிஷ் பிராஞ்சு பிரஸ், பெனிங்டன் அச்சுக்கூடம்.

நடுக்காவேரி: ஜகத்குரு யந்திரசாலை.

திருவாதி: ஜியோதிர் விலாச அச்சுக்கூடம்.

தஞ்சை: 1863 – இந்து வித்யா நிலைய அச்சுக்கூடம், (கன்னைய செட்டியாரது), தஞ்சை நாஷனல் அச்சுக்கூடம், தேசாபிமானி அச்சுக்கூடம், பூரண சந்திரோதய அச்சுக்கூடம், திவாகர முத்திராட்சரசாலை (தஞ்சாவூர் மாதுசாமி சூரிய வம்சியுடையது), சாரதா விலாச அச்சுக்கூடம், திவாகர பிரஸ்.

கும்பகோணம்: லார்ட் ரிப்பன் அச்சுக்கூடம், நேஷனல் பிரஸ்.

திருச்சி: ஸ்ரீ மட்டுவார் குழலாம்பாள் அச்சுக்கூடம் (திரிசிபுரம் புத்தக வியாபாரம் தி. சபாபதி பிள்ளையுடையது; இது பின்னர்ச் சென்னைக்கு மாறியது) அர்ச். சூசையப்பன் கல்வி சாஸ்திர மடத்து அச்சுக்கூடம், சதர்ன் ஸ்டார் பிரஸ், சந்திர வதனி அச்சுக்கூடம், திரிசிரபுரம் கோட்டை; செயின்ட் ஜோஸப் காலேஜ் பிரஸ், சௌத் இந்தியா டைம்ஸ் பிரஸ், மலைக்கோட்டை அச்சுக்கூடம், டாக்டர் சில்வா ஸ்டான்டர்ட் ரிப்பன்பிரஸ், திருச்சி; விவேக ஞானசாகர அச்சுக்கூடம் (திரிசிபுர சொக்கலிங்கம் பிள்ளை), ஞான ரத்னாகரன் அச்சுக்கூடம்.

விஜயபுரம்: கருணாநிதி அச்சியந்திரசாலை.

காரைக்கால்: 1898 முகம்மது சமதானி அச்சியந்திர சாலை.

பாலைக்காடு: மெய்ஞ்ஞான விளக்...

**கருவூர்:** பசுபதி அச்சுக்கூடம்.

**திண்டுக்கல்:** நேடிவ் ராயல் அச்சுக்கூடம், ஞான ரத்னாகார அச்சுக்கூடம்.

**தேவகோட்டை:** மீனலோசனி அச்சுக்கூடம், கலாதர அச்சுக்கூடம், திருநாவுக்கரசு நாயனார் அச்சுக்கூடம்.

**அம்பாசமுத்திரம்:** பாரதி விலாச யந்திரசாலை.

**சேலம்:** சுதேசாபிமானி அச்சுக்கூடம், சௌராஷ்டிர அச்சுக்கூடம்.

**வாணியம்பாடி:** முசோரி எவாஞ்சலிக்கல் லூத்ரன் மிஷனால் 1927இல் இங்கு ஓர் லித்தோ அச்சகம் நடத்தப்பெற்றது; இது தற்போது நவீன முறையில் 'சியான் அச்சக'மென்ற பெயருடன் சென்னையில் இயங்கிவருகிறது.

**ஈரோடு:** சகல கலா நிலைய அச்சுக்கூடம், சென்டிரல் அச்சுக்கூடம்.

**வேலூர்: 1890** வாணி விலாச அச்சுக்கூடம் (வேலூர் குமாரசாமி முதலியாரது); **1887** – விக்டோரியா அச்சுக்கூடம், வி. என். அச்சுக்கூடம்.

**திருப்பத்தூர்:** சின்னைய நாடார் அச்சுக்கூடம்.

**கோவை:** அப்சர்வர் அச்சுக்கூடம், கலாநிதி அச்சுக்கூடம், கிரிசன்ட் பிரஸ், கே. ஆர். வி. அண்ட் கோ அச்சுக்கூடம் (கே. ஆர். வெங்கட்டராமையருடையது), லிட்டரரிஸன் பிரஸ், ஞானபாநு அச்சுக்கூடம்.

**மதுரை:** சேதுபதி அச்சுக்கூடம், பாண்டியன் பிரஸ், வாணிவிலாச அச்சுக்கூடம், காசிம் அச்சுக்கூடம், ஸ்ரீ ராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலை, எக்ஸெல்ஸியர் அச்சுக்கூடம், மீனாம்பிகை அச்சுக்கூடம், திலினாக்ஸ் பிரஸ், சுல்தான் அச்சுக்கூடம்.

**உடுமலைப்பேட்டை:** கோபால் (எலெக்டிரிக்) பிரிண்டிங் ஒர்க்ஸ், வித்யாரக்ஷணி அச்சுக்கூடம்.

**திருநெல்வேலி: 1899** – ஆரியப் பிரகாசினி அச்சுக்கூடம், டையோசீஸன் பிரஸ், சுலலக்ஷண சாதர முத்திராக்ஷர சாலை, முத்தமிழாகார அச்சுக்கூடம்; இந்து தேசாபிமானி அச்சுக்கூடம், யூனியன் ஸென்ட்ரல் அச்சியந்திரசாலை, ஸ்ரீ காந்திமதி விலாசம் பிரஸ், வாணி விலாச அச்சுக்கூடம்.

**மேலைப்பாளையம்:** டிலெக்ஸ் பிரிண்டர்ஸ், செயின்ட் ஜே. ஐ.

பாளையங்கோ[illegible]ணி யந்திரசாலை, சண்முக விலாச அச்சுக்கூடம், ஸ்ரீ லக்ஷ்மி விலாசம் அச்சுக்கூடம்.

தூத்துக்குடி: எஸ். பி. பிரஸ்.

பசுமலை: 1871 – பசுமலை அச்சகம் (அமெரிக்க மதுரை மிஷனது).

நாகர்கோயில்: 1819 – எல். எம். எஸ். பிரஸ், லண்டன் மிஷன் சொசைட்டி அச்சியந்திரசாலை, 1870 தேவகாருண்ய அச்சுக்கூடம்.

தரங்கம்பாடி: இவாஞ்சலிகல் லூத்தரன் மிஷன் பிரஸ், தரங்கை.

இலங்கை: 1741 – ஹாலந்துக்காரர் அச்சகம் (உத்தம கொம்பந்நியாவின் அச்சுக்கூடம்), கொழும்பு; 1825 – நெல்லூர் அச்சகம் (கோட்டா சி.எம்.எஸ். மிஷனுடையது), 1840 – வட்டுக்கோட்டை அச்சகம் (அமெரிக்க மிஷனால் நடத்தப்பட்ட சமயக் கல்லூரியில் (Seminary) அமைந்திருந்தது). 1870 – கத்தோலிக்கத் திருச்சபை பிரஸ், கொழும்பு; வச்சிர யந்திரசாலை, யாழ்ப்பாணம் (மயிலாட்டி மு. நெல்லையா பிள்ளையுடையது), கத்தோலிக்க அனாதை அச்சகம், மட்டக் களப்பு.

ரங்கூன்: நவீன கதா பிரஸ், ஜோதி பிரஸ் (47 – 31 ஆவது வீதி, ரங்கூன்).

மலேயா: ஜார்ஜ் டவுன் அச்சேந்திரசாலை, சேவிகா அச்சகம், பினாங்கு.

கோலாலம்பூர்: தமிழ் நேசன் அச்சகம்.

சிங்கப்பூர்: தினோதையா அச்சகம், தமிழ் முரசு அச்சகம்.

தென்னாப்பிரிக்கா:,யுனைடட் அச்சுக்கூடம், 27, போண்டு வீதி, டர்பன், நெட்டால்..

இனி, தொடக்க காலத்தில் சென்னை நகரிலும் பிற இடங்களிலும் என்னென்ன தமிழ் நூல்கள் அச்சடிக்கப்பட்டுள்ளன என்பதைச் சுருக்கமாகத் தெரிந்துகொள்வோம்:

**சென்னையில் அச்சான நூல்கள்:**

**1779** – தமிழும் இங்கிலேசுமாயிருக்கிற அகராதி (**A Malabar and English Dictionary**): ஜான் பிலிப்பு பப்ரீசியுஸ் & ஜான் பிரெய்த்தென்பட்டு தொகுத்தது. இது சென்னை வேப்பேரி அச்சகத்தில் அச்சிடப்பட்டது. மொத்தம் **385** பக்கங்கள்

*1806* – **கொடுந்தமிழ்:** பெஸ்கி என்னும் வீரமா முனிவர் எழுதிய இலக்கண நூல்; வேப்பேரி அச்சகத்தில் அச்சாகியது.

*1811* – **தமிழ் விளக்கம்:** திருவேற்காடு சுப்பராய முதலியார் தமிழ் உரைநடையில் எழுதிய இலக்கண நூல், சென்னைக் கல்விச் சங்கத்தின் சார்பில் அதனது அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

*1812* **திருக்குறள் மூலபாடம்:** திருவள்ளுவ நாயனார் செய்தது; இலக்கண இலக்கிய ஆராய்ச்சி யுடையவர்களால் பிழையற ஆராய்ந்து சுத்த பாடமாக்கப்பட்டது; தொண்டை மண்டலம் சென்னைப் பட்டணத்தில் தஞ்சை மாநகரம் மலையப்ப பிள்ளை குமாரன் ஞானப்பிரகாசனால் அச்சில் பதிப்பிக்கப்பட்டது. இது மரவெழுத்தால் மாசத்தினச்சரிதையின் அச்சுக்கூடத்தில் நாலடியாருடன் சேர்த்து அச்சிடப்பட்டுள்ளது. திருக்குறளும் நாலடியாரும் ஏட்டுச் சுவடியினின்று முதல்முறையாக அச்சிடப்பட்டது இப்போதுதான்!

*1813* – **இலக்கணச் சுருக்கம்:** சிற்றம்பல தேசிகர் செய்தது.

*1815* – **இராமாயண உத்தரகாண்டக் கதை** – இது மேற்படியாரால் வடமொழி இராமாயணத்திலிருந்து மொழிபெயர்த்து வெளியிடப்பட்டது.

*1819* – **புரூர சக்கரவர்த்தி வாசகப்பா**

*1819* – **திருக்குறள் (அறப்பால்):** எல்லீஸ் துரை பதின்மூன்று அதிகாரங்களில் 68 குறள்களுக்கு மட்டும் ஆங்கிலத்தில் உரையெழுதி அச்சிட்டிருக்கிறார். இதில் சிந்தாமணி, புறநானூறு, நாலடியார், பாரதம் போன்ற நூல்களிலிருந்து மேற்கோள்கள் காட்டியுள்ளார்.

*1820* – **வேதவிகற்ப திக்காரம்**

*1824* – **சதுர் அகராதி:** பெஸ்கி தொகுத்தது; தாண்டவராய முதலியாரும் இராமச்சந்திரக் கவிராயரும் பதிப்பித்தது; சென்னையில் அச்சானது.

*1825* – **கணித தீபிகை:** பண்டள ராமசாமி நாயக்கர் செய்தது; பள்ளிக்கூடப் புத்தகசாலையின் செலவினால் வேப்பேரி அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது. இவர் பள்ளிக்கூடப் புத்தகச் சங்கத்தின் உறுப்பினராக இருந்தவர். இந்நூல் தடித்த தாளில் 128 பக்கங்கொண்டு, பெரும்பாலும் புள்ளியிடப்படாமலும், ஆங்கிலக் கணித முறையை ஒட்டித் தமிழ் எண்களைக் கணிதத்திற்காக வேண்டிய ய – ஐ 10 என்றும், ள – ஐ 100 என்றும், தூ – ஐ 1000 என்றும் சுன்னமிட்டுக் கூட்டல் பெருக்கல் கழித்தலுக்காக எளிதாக இருக்குமென்று மாற்றி அமைத்தும் பயன்படுத்தப் பட்டுள்ளது. தமிழ் எண்களைப் புதிய முறையில் மாற்றி அமைத்து அச்சிட்ட முதல் நூல் இது.

பூம்பாவையர் விலாசம்.

1825 – பூம்பாவையர் விலாசம்.

1826 – கதாமஞ்சரி, பஞ்சதந்திரம்: தாண்டவராய முதலியார் செய்தவை. தரும நூல் – கந்தசாமிப் புலவர் மொழி பெயர்த்தது; இது பிரஞ்சுமொழியிலும் மொழிபெயர்த்து அச்சிடப்பட்டது.

1827 – தமிழ் ஹரிச்சுவடி: திரு ஹார்க்கின்சும் திருவேங்கடாசல முதலியாரும் சேர்ந்து செய்த நூல்.

1828 – இலக்கண வினாவிடை – தாண்டவராய முதலியார் செய்தது.

1830 – திருவேங்கடத்தந்தாதி மூலபாடம்: அழகிய மணவாளதாசர் இயற்றியது; திருவேங்கடாசல முதலியாரால், மேடவாக்கம் சேஷாசல முதலியாரது ரவாணா அச்சுக்கூடத்தில் அச்சிட்டுப் பதிப்பிக்கப்பட்டது. இதே ஆசிரியர் இயற்றிய திருமாலிருஞ்சோலைமலை, அழகரந்தாதி, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்துக் கலம்பகம், நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, திருவேங்கடமாலையாவும் ஷை முதலியாராலே, ரவாணா அச்சுக்கூடத்திலே 1830லே அச்சிட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

1830 – நீதிநெறி விளக்கம்: குமரகுருபரர் செய்ததை எம். ஸ்டோக்ஸ் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

1830 – திருவள்ளுவருரையும் திருவள்ளுவமாலையுரையும்: திருத்தணிகை விசாகப் பெருமாளையரும் சரவணப் பெருமாளையரும் தமது அச்சகத்தில் அச்சிட்டுப் பதிப்பித்துள்ளனர்.

1832 – பூமி சாஸ்திரம்: இரேனியூசையர் இயற்றியது. 'இந்தப் பூமியினுடைய தன்மையையும், அதிலுள்ள கண்டங்களையுஞ் சமுத்திரங்களையும், அவற்றிலுள்ள தேசங்களையும், அவைகளிலுள்ள ஆளுகைவகை முதலானவைகளையும், அந்தந்தத் தேசத்தாருடைய சரித்திரங்களையும் விவரித்துக் காட்டும் நூல்.' சென்னை சர்ச்சு மிசியோன் அச்சுக்கூடத்தில் அச்சிட்டுப் பதிப்பிக்கப்பட்டது.

1833 – வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி: தி. சரவணப் பெருமாளையர் அச்சிட்டுப் பதிப்பித்து வெளியிட்டது.

1835 – இலக்கணப் பஞ்சகங்களில் நன்னூல் மூலமும் அகப்பொருள் மூலமும், புறப்பொருள் இலக்கியத்தோடு; வெண்பாமாலை மூலமும்: தாண்டவரா[illegible] பிள்ளையும் சேர்ந்[illegible]

*1835* – **ஒரு சொற் பலபொருட்டொகுதி உரைபாடம்:** புதுவை நயனப்ப முதலியார் செய்தது; எழும்பூர் சரஸ்வதி அச்சுக்கூடத்தில் அச்சிட்டுப் பதிப்பித்தது.

*1836* – **தஞ்சைவாணன் கோவை:** பொய்யா மொழிப் புலவர் செய்தது; இது புதுவை நயனப்ப முதலியாரால் பழுதற ஆராயப்பட்டு, சரஸ்வதி அச்சுக்கூடத்தில் அச்சிட்டுப் பதிப்பிக்கப்பட்டது.

*1835* – **நேமிநாதம் மூலபாடம்:** குணவீர பண்டிதனார் செய்தது; புதுவை நயனப்ப முதலியாரால் பரிசோதிக்கப்பட்டு, திருவேங்கடாசல முதலியாரது சரஸ்வதி அச்சுக்கூடத்தில் அச்சிட்டுப் பதிப்பிக்கப்பட்டது. இஃது இவர் மருமகனாகிய புதுவை பொன்னுசாமி முதலியாரால் நிறைவேறியது; பக்கம் – 56.

*1836* – **திருவாசகம்:** மாணிக்கவாசகர் இயற்றியது; இதனைத் திரு சுப்பராய ஐயர், சென்னைக் கல்வி விளக்க அச்சுக்கூடத்தில் அச்சிட்டுப் பதிப்பித்துள்ளார்.

*1837* – **கொக்கோகம்:** கொக்கோகர் செய்த வடமொழி நூலை வரதுங்க பாண்டியன் தமிழில் மொழிபெயர்த்துத் தந்ததை, தஞ்சையாதீன வித்துவானாகிய சென்னைக் கல்விச் சங்கத்துக் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரால் கண்ணோட்டமிடப்பட்டு, கொற்றமங்கலம் இராமசாமிப் பிள்ளையால் அச்சிற் பதிப்பிக்கப்படலாயிற்று. இந்நூல் ஆறு அத்தியாயங்களைக் கொண்டது. இதில் அமுத நிலைச் சக்கரம் அச்சுப்படிமை மூலம் அச்சிடப்பட்டுள்ளது.

*1837* – **பரமராசியமாலை மூலபாடம்:** குரு நமசிவாயர் செய்தது; இதனை ஓலைச்சுவடியினின்று மண்ணிப்பாக்கம் வேதகிரி முதலியார் சுத்த பாடமாகப் பிழைதிருத்திக் கொடுக்க, காஞ்சிபுரம் சபாபதி முதலியாரால் திருவேங்கடாசல முதலியாரது சரஸ்வதி விலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

*1838* – **தொன்னூல் விளக்கம்** – வேதகிரி முதலியார் பதிப்பித்தது.

*1838* – **பாண்டி தேசத்தின் கதைக் குறிப்பு** – வில்சன் எழுதியது; **வருண குலாதித்தன் மடல்,** *1839* – **கோள தீபிகை** – சரவணப் பெருமாளையர்; **பணவிடு தூது** – சரவணப் பெருமாட் கவிராயர் செய்தது; **சேந்தன் திவாகரம்;** *1840* – **திருக்குறள்** – அறம் – சென்னை அமெரிக்கன் மிஷன்; **ஆத்திசூடி, எண்சுவடி, நன்னூல் காண்டிகை** – விசாகப் பெருமாளையர் உரையுடன்; **சடகோபரந்தாதி, திருவாதவூரர் புராணம்; திருப்பாடற்றிரட்டு தாயுமானவர்** – கல்வி விளக்க அச்சகம்; **கலிங்கத்துப்பரணி;** *1842* – **நைடதம் மூலமும் உரையும்; பிரகலாதன்**

சரித்திரம்; 1843 – திருட்டாந்த சங்கிரகம் – பெர்சிவல், அமெரிக்கன் பிரஸ், சென்னை; 1844 – நீதிநூலாகிய நாலடியார் – புதுவை நயனப்ப முதலியார் உரை; ரிக்கார்ட் அச்சுக்கூடம், சென்னை; தமிழ்ச் சட்டங்கள் – ரங்கநாயக செட்டியார்; கம்பராமாயணம் – பால, ஆரணிய காண்டங்கள்; நீதிசார வாக்கியம் – இராமசாமிப் பிள்ளை; 1846 – திருமந்திரம் – திருமூலர் செய்தது; பரப்பிரம முத்திராக்ஷரசாலை. மகாபாரதம் – கல்வி விளக்க அச்சுக்கூடம்.

1847 – ஈட்டி எழுபது, வெற்றி வேற்கை; தொல் காப்பியம் – நச்சினார்க்கினியர் உரை; மழவை மகாலிங்கையர் பதித்தது. அருணாசல புராணம் – ஷை மகாலிங்கையர் பதித்தது; நன்னூல் விருத்தியுரை: இராமாநுச கவிராயர்; பஞ்ச ரத்ன மாலிகை – இராமாநுச கவிராயர்; தாயுமான சுவாமிகள் திருப்பாடற்றிரட்டு, சொருபசாரம், உபநிடதம்; 1849 – திருக்குறள்: வேதகிரி முதலியார் பதிப்பு: 1850 – இராமநாடகம்; 1850 – அருணாசல் புராணம் மூலமும் உரையும், 1851 – அமெரிக்காக் கண்டம் – பம்மல் விஜயரங்க முதலியார்; 1852 – நாலடியார்: வேதகிரி முதலியார் பதிப்பு; கொலை மறுத்தல் – சாந்தலிங்க சுவாமிகள்; 1853 – ஆண்புத்தி மாலையும் பெண்புத்தி மாலையும்; திருமுருகாற்றுப்படை – ஆறுமுக நாவலர் பதிப்பு; கபிலரகவல்; 1884 – யாப்பருங்கலக் காரிகை – மூலமும் உரையும்; முத்தமிழ் விளக்க அச்சுக்கூடம்; வைசிய புராணம்; நன்னூல் – சிவஞான சுவாமிகள் விருத்தியுரை; 1885 – இங்கிலாண்டு தேச சரித்திரம் – ப. விஜயரங்க முதலியார்; 1856 – திருக்குறள் – கிரால் ஜெர்மன் மொழியில் மொழிபெயர்த்தது அரிச்சந்திர விலாசம், சிங்கார சதகம், ஆசாரக் கோவை; 1857 – இலக்கண நூல் – ஜி. யு. போப்; சென்னை அமெரிக்கன் பிரஸ் ரிவினியு போர்டார் உத்தரவுகள்; கந்த புராணக் கீர்த்தனைகள் தண்டியலங்காரம் மூலமும் உரையும்; 1858 – தொல்காப்பிய நன்னூல் – சாமுவேல் பிள்ளை ஒப்பிட்டு எழுதி வெளியிட்டது; ஒழிவிலொடுக்கம் – சிதம்பர சுவாமிகள்; சீட்டுக் கவித் திரட்டு, திரிகடுகப் பதவுரை; 1859 – தமிழ்ச் செய்யுட் கலம்பகம் – ஜி. யு. போப்; Tamil Hand Book - Pope கம்பராமாயணம் – சுந்தரகாண்டம்; கந்தரந்தாதி, திருச்செந்தூரகவல் தேரையர் வைத்தியம்; 1860 – நீதி நூல் – வேத நாயகம் பிள்ளை பொன்னிலக்கம், நெல்லிலக்கம்; பஞ்சதிகார விளக்கம் திருக்கோவையார் உரை – நச்சினார்க்கினியர்; 1861 – மகாபாரதம் திருக்குறள் – பரிமேலழகர் உரை, இலக்ஷ்மி விலாச அச்சகம்; கைவல்ய நவநீதம், கோவிந்த சதகம், வேதாந்த சூளாமணி ... ரொழுக்கம் – தாவீது; ...

ஆத்திசூடி புராணம்: மூலமும் உரையும், புதுவை க. சுப்பராய முதலியார் பதிப்பு, கல்வி விளக்க அச்சுக்கூடம், சென்னை; பெரிய புராணம், 63 நாயன்மார் வரலாறு; சூடாமணி நிகண்டு; கம்பராமாயணம் – கிட்கிந்தா காண்டம்; 1864 – சாரங்கதார விலாசம், ஆறெழுத்தந்தாதி, நன்னூற் சுருக்கம்; 1865 – திருக்குறள் – லத்தீனத்தில் மொழிபெயர்த்தது; திருப்போரூரந்தாதி: 1866 – கலாவர்த்தினி தொகுப்பு: கலாரத்னாகரம் அச்சுக்கூடம், சென்னை; சாரீர வினாவிடை – ஜகந்நாத நாயுடு, சென்னை; யூநாநி பதார்த்த குண விளக்கம்; தமிழறியும் பெருமாள் கதை; நளவெண்பா, சூடாமணி நிகண்டு – தாண்டவராய முதலியார் பதிப்பு.

1866 – நன்னூற் சுருக்கச் சார்பு: சவுந்தர நாயகபிள்ளை; வாசக இலக்கணம்: ஜான் அறிவானந்தம் பிள்ளை; திருநாவுக்கரசர் தேவாரம் – கலாரத்னாகரம் அச்சுக்கூடம்; மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்; 1867 – ராபின்சன் குருசோ சரித்திரம்; மாதரொழுக்க விலக்கணம்; கற்பிலக்கணம் – 1867: காஞ்சிபுரம் சபாபதி முதலியார்; 1868 – தேரையர் வயித்தியம்; சிந்தாமணி – நாமகள் இலம்பகம் – ஹென்றி பவர்; ஆதிநந்தவனப் பிரளயம், கல்லாடம்; தொல்காப்பியம் – இளம்பூரணம் – எழுத்து; மயூரப் புராணம் – மீனாட்சிசுந்தரம் பிள்ளை; தாசில்தார் நாடகம், மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி; 1880 – சிலப்பதிகாரம் – புகார்க் காண்டம் தி. க. சுப்பராய செட்டியார் பதிப்பு; 1883 – சீவக சிந்தாமணி (முதற்பாகம்) – ப. அரங்கசாமி பிள்ளை பதிப்பு. 1881 – சூளாமணி – சி. வை. தாமோதரம்பிள்ளை பதிப்பு; 1894 – மணிமேகலை – திருமயிலை சண்முகம் பிள்ளை பதிப்பு; ஒளவை குறள் – எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை; மினர்வா பிரஸ், சென்னை; 1878 – சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள் – ச. வேதநாயகம் பிள்ளை; நீதிக் கீர்த்தனைகள் – கிருஷ்ணய்யர்; தோகைமாலை – சாமு நயினா லெப்பை; நீதிநெறி விளக்கக் கீர்த்தனை – பகடாலு நரசிம்மலு நாயுடு, சேலம்; 1876 – சாராமிர்தத் திரட்டு: தொகுத்தவர் இராமகிருஷ்ணப் பிள்ளை; இதில் பால், அதிகாரப் பகுப்புகள், திருக்குறளை அடியொற்றி யுள்ளன; அதிகார அட்டவணையும் பாடல் தெரிந்தெடுக்கப்பட்ட மூலநூல் விவரமும் இதன் முகப்பில் தரப்பட்டுள்ளன.

இலங்கையில் அச்சான நூல்கள்: இங்கு ஹாலந்துக்காரர் அச்சுக்கூடம் ஒன்று அமைத்திருந்தனர். இதில் 1740 – மத்தியு சுவிசேஷம் – ரெவ. ஏ. கிறேமர் மொழிபெயர்த்தது; 1753 – சத்தியத்தின் சயம் – பிலிப்பு தெமல்லோ எழுதியது; 1755 – தாவீதின் சங்கீதங்கள், 1759 – புதிய ஏற்பாடு, ஒல்லாந்த இறப்பற மாதுச் சபையின் சரித்திரம், 1760

சபை செபங்கள் – இவை யாவும் ஷி தெமல்லோ – இறப்புற மாதுச் சபை செபங்கள் – இவை யாவும் ஷி தெமல்லோ செய்தவையாகும். 1827 – தேவசகாயம் பிள்ளை நாடகம் – முத்துக்குமாரசாமி புலவர் செய்தது; 1835 – சிறு பிள்ளைகள் வாசிக்கப் பழகுகிறதற்காகச் செய்த புத்தகம்: மானிப்பாய் வெளியீடு. 1836 – தஞ்சை வாணன் கோவையுரை – புதுவை நயனப்ப முதலியார்; 1936 – சுப்பையா பிள்ளை; 1843 – தமிழ்ப் பழமொழிகள் – பீட்டர் பெர்சிவல் தொகுத்தது, ஆங்கில மொழிபெயர்ப்புடன் கூடியது; நடன நட்டம், தமிழ் அகராதி – அமெரிக்க மிஷன், தமிழ்ப் பேரகராதி – ஜே. நைட்; மானிப்பாய் அகராதி – பண்டிதர் சந்திரசேகரம்; உவின்சுலோ ஆங்கிலம் – தமிழ் அகராதி – மிரான் உவின்சுலோ; 1844 – கணக்கதிகாரம் – சுவாமி பிள்ளைப் புலவர்; 1843 – உடற்கூறு பற்றிய உரையாடல்; யாழ்ப்பாண அமெரிக்க மிஷன். 1845 – சாலோமோனின் நீதிமொழிகள்; 1848 விறலி விடுதூது; 1854 – சணேந்திரியங்கள்; 1867 – சிவநாம விளக்கம் – கே. சுப்பையர்; சிந்தாகுலத் திரட்டு; 1868 – சந்தான தீபிகை – இராமலிங்கையர்; 1847 – இலக்கிய சங்கிரகம் – அமெரிக்க மிஷன் பிரஸ்; 1848 – சோதி சாத்திரம் – உள்ளமுடையான்; ஹோசிங்டன் ஆங்கில விளக்கங்களுடன் வட்டுக் கோட்டை சமயக் கல்லூரி அச்சகத்தில் அச்சிட்டது; 1850 – நியாய இலக்கணம், 1855 – சிறிய சீறா: யாழ்ப்பாண பரிகாரி மரக்காயர் எனப்படும் பக்கீர் முகியித்தீன்; வீச கணிதம்: கறோல் விசுவநாத பிள்ளை; 1859 – The Tamil plutarch: சைமன் காசி செட்டி; 1860 – திருக்கோவையார் மூலமும் உரையும்: ஆறுமுக நாவலர்; 1868 – திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையுடன்: மேற்படியார்; வான சாஸ்திரம்: ஆணல் என்னும் அருணாசல சதாசிவம் பிள்ளை எழுதியது; 1862 – நன்னூற் சுருக்கம் – சவுந்தர நாயகம் பிள்ளை; 1863 – மனக்கணக்கியல், பூமி சாஸ்திரப் பொழிப்பு; 1867 – இரண வைத்தியம்; 1872 – யாழ்ப்பாண சமய நிலை – ஆறுமுக நாவலர்; ஞானக் கும்மி – முத்துக்குமார கவிராயர்: 1874 – ஞானானந்த புராணம்: தொம்பிலிப்பு; அண்டபிண்ட வியாக்கியானம் – பெரிய சஞ்சீவிநாத சுவாமி (இத்தாலியர்); 1875 – கதா சிந்தாமணி: சந்தியாகுப் பிள்ளை சந்திரவர்ணம்; 1878 – நாற்கவிராச நம்பியகப்பொருள் விளக்கவுரை – வல்வை வைத்தியலிங்க பிள்ளை; 1875 – சூடாமணி நிகண்டு; சைவ வினாவிடை – ஆறுமுக நாவலர்; 1878 – பூதத் தம்பி விலாசம் – அளவெட்டி கணபதிப் பிள்ளை; 1880 – நன்னூற் காண்டிகையுரை – ஆறுமுக நாவலர்; 1882 – பிரயோக விவேகம் – மேற்படியார்; நல்லூர் ஆறுமுக நாவலர் சரிதை – கனகரத்தினம் 1889 – கிறித்துப் பல பிரிவினை, விவிலிய நூல் வரலாறு – ஆறுமுக நாவலர் வேறு ஒருவர் பெயரில் எழுதியவை; 1890 – தருமபுத்திர நாடகம் – சுவாமிநாதர்,

1887 – குமாரசாமி முதலியார் கவித்திரட்டு; சேத்திரக் கணிதம் – டி.கே. வேலுப்பிள்ளை; 1888 – கோணேசர் கல்வெட்டு – வல்வை சின்னத்தம்பி பிள்ளையால் வெளியிடப்பட்டது; 1892 – சகுண மருந்தின் துணை (Homeopathic Guide); 1887 – இரகு வம்சம் – நல்லூர் அரசகேசரி என்பவர் காளிதாசன் வடமொழியில் எழுதிய நூலைத் தமிழில் மொழிபெயர்த்தது; இதனைப் பதிப்பித்தவர் நல்லூர் எஸ். பொன்னம்பலப் பிள்ளை; யாழ்ப்பாண வெளியீடு. 1852 – குருட்டு வழி – மிரான் வின்சுலோ எழுதியதை வேதநாயக சாஸ்திரி தமிழில் மொழிபெயர்த்தது. 1869 – கோப்பிக் கும்மி – ஏ. ஜோஸப் பாடியது.

1883 – சிவஞான சித்தியார் – சுபக்கம் – ஆறுமுக நாவலர் பதித்தது; 1886 – தமிழ் வியாகரணம் – மு. சிதம்பரம் பிள்ளை நெவின்சு; பாவலர் சரித்திர தீபகம் – அ. சதாசிவம் பிள்ளை; 1876 – சிந்தாமணி நிகண்டு – வல்வை வைத்தியலிங்கம் பிள்ளை; சூடாமணி நிகண்டு, 11ஆம் தொகுதி அனுபந்தம், உவமைப் பாட்டு 20 – பிலிப்பு தெமெல்லோ, 1886 – தமிழ்ப் பாஷை வைபவம் – ஐசுபரி R.O.D. இலங்கைச் சரித்திர சூசனம்; – 1885 – காளிதாச சரித்திரம் – முத்துத் தம்பிப் பிள்ளை – 1889 – தருக்க பரிபாஷை – கு. கதிரைவேற்பிள்ளை; உரிச் சொல் நிகண்டு – சதாசிவம் பிள்ளை 1890 – எஸ்தோக்கியார் நாடகம் – அச்சுவேலி தம்பிமுத்துப் பிள்ளை; சங்கிலிராசன் நாடகம் – மிக்கேல் மாலை; 1898 – சரசோதி மாலை – போகராச பண்டிதர்; 1894 – வெடியாசன் நாடகம் – அராலி இராமு எழுதியது; 1895 – மோகனாங்கி (நாவல்) – தி. த. சரவண முத்துப் பிள்ளை; – 1892 சம்சோன் கதை – அச்சுவேலி தம்பி முத்துப் பிள்ளை; – 1891 சைவ பிரகாச சமாசாவேதனம் – திரிகோணமலை சைவபிரகாச சமாஜ வெளியீடு; 1892 – தத்தைவிடு தூது – திருகோணமலை சரவணமுத்துப் பிள்ளை; 1898 – ஞானக் கும்மி – முத்துக்குமாரசாமிக் கவிராஜர்; தமிழ் இலக்கண தீபிகை – ஜேம்ஸ் அப்பா பிள்ளை; வட்டுக் கோட்டை வெளியீடு; 1893 – தத்துவப் பிரகாசம் மூலமும் உரையும் – சீர்காழி தத்துவப் பிர்காச சுவாமி எழுதியது; இதனைப் பதிப்பித்தவர் வேலணி கந்தபிள்ளை; கொக்குவில்லில் வெளியாகியது; 1896 – திருச்செல்வர் காவியம் – யாழ்ப்பாண அருளப்ப நாவலர் (பூலோக சிங்க முதலியார்) செய்தது; இதனைப் பதிப்பித்தவர் என். தியாகராசப் பிள்ளை; 1880 – தேவாரத் திரட்டு – பதிப்பித்தவர் ஆறுமுக நாவலர்; 1887 – பதார்த்த விஞ்ஞானம் – ஜி. வி. ஏ. சுப்பிரமணிய பிள்ளை; 1898 – திருத்தில்லை நிரோட்டக யமக அந்தாதி – வடகோவை வேலுப்பிள்ளை; 1898 – தேச வளமை – கொழும்புவில் வெளியானது; 1896 – பிரலாப கவிதை – ஜே.பி. தம்பைய உபாத்தியாயர்; 1898 – மகாபாரத மூலமும்

புத்துரையும் (வில்லிபுத்தூரார் – ஆதிபர்வம்) – விளக்கமும் குறிப்புரையும் தந்தவர் ந. ச. பொன்னம்பலம் பிள்ளை; யாழ்ப்பாணத்தில் வெளியாகியது. 1884 – யாழ்ப்பாண வைபவம் இது வட்டுக்கோட்டை வி. சதாசிவம் பிள்ளை தொகுத்தது; சென்னையில் அச்சானது. 1853 – வேதாகம சங்கத்தின் மகோற்சவத்தைப் பற்றிய புத்தகம் – யாழ்ப்பாணத்தில் வெளிவந்தது.

**புதுவையில் அச்சான நூல்கள்:**

கி.பி. 1710இல் புதுச்சேரியில் அச்சகம் ஏற்படுத்தப்பட்டது. இங்கு 1840இல் 'ரோமன் கத்தோலிக்க பிரஸ்' அமைக்கப்பட்டது; குவர்னமா அச்சுக்கூடம் இருந்தது; வேறு பல அச்சகங்களும் தோன்றியுள்ளன.

1822 – **பரமார்த்த குருவின் கதை** : பெஸ்கி எழுதியது. இதனைப் பாபிங்டன் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து லண்டனில் வெளியிட்டுள்ளார்.

1823 – **ஆதிகால சரித்திரச் சங்கிரகம்** : புதுவை ஞானப் பிரகாசர் எழுதியது. இது சென்னையில் அச்சாகியது.

1842 – **வேத விளக்கம்** : பெஸ்கி என்னும் வீரமா முனிவர் இயற்றிய நூல். உரோமாபுரியினின்று வந்த உத்தரவின்படி, புதுவைப் பெரிய கோயிலைச் சேர்ந்த அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1842 – **பேதக மறுத்தல்** : தரங்கம்பாடி லூதரன் மிஷனரிகள், வீரமாமுனிவரின் வேத விளக்கத்திற்குத் தடை கிளப்பியதால், பெஸ்கி அவர்களுக்கு விடையிறுத்த நூல்; 139 பக்கங்கொண்டது. புதுவையில் அச்சடிக்கப்பட்டது.

1842 – **லூத்தேரியனியத் தியல்பு** : இதுவும் பெஸ்கி எழுதிய மறுப்புத் துண்டு வெளியீடாகும்; புதுவையில் அச்சானது.

1843 – Grammatica Latino Tamulica - Beschi. Tr. E. Missione Madurensi, Pudicheri. பெஸ்கி இலத்தீனத்தில் எழுதிய தமிழ் இலக்கணம்.

1843 – **ஞான முயற்சி** : இது ஒரு ரோமன் கத்தோலிக்க வெளியீடு; 335 பக்கம். புதுவை ஞானப்பிரகாச சாமி (Pere Louis) எழுதியது.

1844 – **ஆதிச்சுவடி** : பாண்டிச்சேரியில் அச்சிடப்பட்டது; 1862–லும் இது வெளியிடப்பட்டது.

1845 – **இலத்தீனிலக்கண நூற் சுருக்கம்** : அப்போஸ் தொலிக் குருக்கள், பொன்னாந் (கிளிமண்ட்), புதுவை.

– பூமி சாஸ்திர நூலாதாரம் – அப்போஸ்தொலிக் குருக்கள்.

– பல்லவ சரித்திரம் – துபிரேய் எழுதியது.

– புதுவையும் தமிழும் –

– தமிழ் பிரெஞ்சு அகராதி, பிரெஞ்சு தமிழ் அகராதி – முசே, எல். துப்புய் (Moussel, Dupuis).

– பிரான்சு தேச சரித்திரம் – மு. த. வேலாயுதனார்.

– பிரஞ்சு இலக்கணம் (இடைக்காலம்) – ரா. ஆளவந்தான்.

*1849* – இலக்கண நூலாதாரம், இலக்கணச் சுருக்கம்.

*1851* – தேம்பாவணி – வீரமாமுனிவர் இயற்றிய காவிய நூல்; பாண்டிச்சேரி சன்ம வீராக்கினி மாதா கோயிலைச் சேர்ந்த அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது.

*1858* – ஞானக்கண்ணாடி; வேத சாட்சியான தேவசகாயம் பிள்ளை சரித்திரம்; புதுவையில் அச்சானது.

*1858* – ஞானாமிர்த தடாகம்: பி. லூயிஸ் என்னும் சுதேச கிறிஸ்தவரால் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டது; 788 பக்கங்கள்; 4 படங்களுடன் கூடியது.

*1860* – குறட் சங்கிரகம் – திருவள்ளுவர் – (Fragements traditus, Ariel, E. Paris, 1818, 1852)

*1860* – பிரஞ்சு தமிழ், தமிழ் பிரஞ்சு அகராதி – அ. பிளேன். இலக்கணச் சுருக்கம் – 180 பக்கங்கள்; 8 அணா.

*1861* – ஞான உபதேசச் சுருக்கம் – தமிழ்க் கத்தோலிக்கருக்குக் காலையிலும் மாலையிலும் பயன்படக்கூடிய தோத்திரங்களைக் கொண்ட வெளியீடு.

*1860* – இலக்கணச் சுருக்கம் – சவுரிமுத்துப் பிள்ளை செய்தது; 180 பக்கங்கள் கொண்டது.

*1861* – வாலர் பொக்கிஷம் – ரோமன் மாதாகோயில்களில் கூடும் கூட்டங்களில் காலைமாலை வழிபாட்டிற்காகச் சுருக்கமானதாகவும் நீண்டதாகவும் தயாரிக்கப்பட்ட பாடல் தொகுதிகளைக் கொண்ட வெளியீடு; பக்கம் 266; படங்கள் 6 கொண்டது.

*1863* – கிறிஸ்து நாதர் அனுசாரம் – தாமஸ் ஏ. கேம்பிஸ் இலத்தீனத்தில் எழுதியதை, எஸ். ஞானப்பிரகாச நாதர் தமிழில் மொழிபெயர்த்தது; 390 பக்கம், புதுவையில் வெளியிடப்பட்டது.